# பொருளடக்கம்


இமாம் கஸ்ஸாலி (ரஹ்) முன்னுரை ........................ 6

1. சிந்தனையின் சிறப்பு ........................ 11

2. சிந்தனை என்றால் என்ன? ........................ 19

3. சிந்தனைக்குரியவை ........................ 25

4. சிந்தனையும் தெய்வீகமும் ........................ 39

5. இறைவனின் செயல் ........................ 45

6. மண்ணகம் பற்றி... ........................ 57

7. உயிரினம் பற்றி... ........................ 62

8. நீருக்கடியிலே நிலை பெற்றவை ........................ 67

9. காற்றும் மேகமும் ........................ 73

10. இறுதியாக இரண்டு வார்த்தைகள் ........................ 77

## இமாம் கஸ்ஸாலி(ரஹ்) அவர்களின்

# முன்னுரை

எல்லையற்ற பெருமைக்குரிய இறைவனைப் பாராட்டுகிறேன்.

சிந்தனைக்கும் கற்பனைக்கும் அப்பாற்பட்ட அவனுடைய வலிமை வரம்பு கட்ட முடியாதது. இறைவனைத் தேடுகிறார்கள் பலர், அவனுடைய பேராற்றலை எடைபோடத் துடிக்கிறார்கள் சிலர். அவர்கள் அனைவரும் எதையும் புரிந்து கொள்ள முடியாமல் திகைத்து நிற்கிறார்கள்.

மனிதனின் மனம் ஆசை நிறைந்தது. தன்னையும் தன்னைச் சுற்றியுள்ள அனைத்தையும் படைத்த தனியோனை அறியத் துடிக்கிறது மானிட உள்ளம். மனிதனின் உள்ளத்திற்கு இறைவனை ஓரளவேனும் அறியும் ஆற்றல் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் எடுத்த எடுப்பில், ஒரே முயற்சியில் அவனை அறிந்து கொள்வது அசாத்தியமான ஒன்று.

இறைவனைப் பற்றி மானிட மனம் தெரிந்து கொள்ள முற்பட்டுத் துடிக்கும் போது, ''பொறு,



அவசரப்படாதே, பொறுத்திரு!'' என்று மேலிடத் திலிருந்து மானசீகத் தீர்ப்பு கிடைக்கிறது. தோல்வியை ஏற்றுக் கொண்டு திரும்பும் சிந்தனைக்கு இது தான் கிடைக்கும் விடை. அமைதியும் பொறுமையும் பெற்றவர்கள் அடையும் இறையறிவை மற்றவர்களால் எப்படியும் அடைய முடியாது.

மேலிடத்திலிருந்து வரும் தீர்ப்பு இத்துடன் முடிந்து விடவில்லை. இதோ தீர்ப்புத் தொடர்கிறது: ''மானிட மனமே! சிந்திக்கிறாயா? உன் சிந்தனையை இறை வணக்கத்தில் செலுத்து. ஒருகால் உனக்குச் சிறிதளவு அறிவு கிடைக்கலாம். அடிமையாகிய நீ அடிமை களுக்குரிய வழியில் நடந்து கொள். ஆட்டிப் படைக்கும் இறைவனை உன் சிந்தனை கட்டுப் படுத்தாது. அவன் உன்னைப் படைத்த இறைவன்; உன்னைப் போல் அடிமையல்லன். அவனை உன்னால் முழுமையாக அறிந்து கொள்ள முடியாது.

''உன் சிந்தனை திருப்தியடைய மறுக்கிறதா? இறைவனின் அருட்கொடைகளையும் ஆற்றல் களையும் எண்ணிப்பார். அவனுடைய அருட் கொடைகள் ஒவ்வொன்றையும் சிந்தனையில் வைத்து நிறுத்துப் பார்; அவற்றிற்கு நன்றி செலுத்து. படைப் பினங்களுக்கு இறைவனால் அளந்து கொடுக்கப் பட்டிருக்கும் இன்ப -துன்பம், லாப-நஷ்டம், வெற்றி-தோல்வி, ஏற்ற-தாழ்வு முதலிய அனைத்தையும் ஒருமித்த மனத்தோடு எண்ணிப் பார். இவை இறைவனின் வலிமையைக் காட்டும் செயல்கள். இவை நீ முதலில் ஆராய வேண்டியவை.

''செயல்களைத் தெரிந்து கொண்டதும் நீ செயலுக்குரிய இறைவனைத் தெரிந்துக் கொள்ள ஆசைப்படுகிறாயா? அப்படியானால் மனிதனின் ஆற்றலுக்கு அப்பாற்பட்ட ஒன்றைத் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறாய் என்பதே பொருள். இறைவனை முழுமையாகத் தெரிந்து கொள்வது மனிதனின் ஆற்றலுக்கு அப்பாற்பட்ட ஒன்று என்பதில் கருத்து வேற்றுமை கிடையாது. மனிதனால் அறிய முடியாத ஒன்றை அடி முதல் நுனிவரை நீ அறிய ஆசைப் படுகிறாய். அத்துடன் அதை அறிந்து கொள்ளும் விஷயத்தில் நீ பெரிதும் அவசரப்படுகிறாய். எனவேதான் நான் சொல்லுகிறேன், 'சற்றுப் பொறு, அவசரப்படாதே!' என்று. இறையறிவில் அவசரத்தைக் காட்டுவது அறியாமையாகும்.''

இறைவனின் ஆற்றலை முறைப்படி உணர முடியாமல் மனிதனின் உள்ளம் திகைத்து நிற்கிறது. இறைவனின் ஆற்றலை அளந்து பார்க்க முயலும் போதெல்லாம் மனிதனின் நிலை இப்படித்தான் இருக்கும். இது தவிர்க்க முடியாத ஒன்று.... பெருமானாருக்கும் நபித் தோழர்களுக்கும் நபிப் பரம் பரையினருக்கும் இறைவனின் பேரன்பு எப்போதும் கிடைக்குமாக!

சிந்தனை என்பது என்றைக்கும் சிறப்புள்ளது தான். அதன் சிறப்பை எடுத்துரைக்கும் மறைக் கருத்துக்களும் நபிக் கருத்துக்களும் ஏராளமாக இருக்கின்றன.



''ஒரு வினாடி நேர சிந்தனை, ஓராண்டு கால இறை வணக்கத்தை விடச் சிறந்தது!'' என்பது பெருமானார் நமக்குக் கொடுத்திருக்கும் ஒரு முத்து.

சிந்தனை, அதிலிருந்து கிடைக்கும் படிப்பினை முதலியவற்றைத் திருக்குர்ஆன் உயர்த்தி வைத்துக் கணிக்கிறது. தெளிந்த ஞானத்துக்கும் தீர்க்கமான முடிவுக்கும் சிந்தனையே அடிப்படை என்பதை யாரால் மறுக்க முடியும்! வலையைக் கடலில் வீசி மீனினத்தைப் பிடிப்பது போல், சிந்தனையை மனக்கடலில் வீசி அறிவினத்தைப் பிடிக்கலாம். பசுமையான மரத்தில் கட்டப்பட்டிருக்கும் கண்ணியில் பறவையினம் சிக்கிக் கொள்வது போல், சிந்தனைக் கண்ணியில் ஞானப் பறவைகள் கட்டுண்டு சிக்கிக் கொள்கின்றன.

சிந்தனையின் சிறப்பை உங்களுக்கு நான் எழுதிக்காட்ட வேண்டியதில்லை. ஏனெனில் அதன் சிறப்பைப் பெரும்பாலோர் தெரிந்து தான் வைத்திருக் கிறார்கள். ஆனால் சிறப்பைத் தெரிந்து கொண்டி ருக்கும் அவர்கள் சிந்தனையின் அடிப்படையையும் விளையும் நற்பயன்களையும் உணரத் தவறி விடுகிறார்கள். சிந்தனை என்றால் என்ன, அது எங்கிருந்து - எப்படி உருவாகிறது, எப்படி சிந்திக்க வேண்டும் என்பன போன்றவை பெரும்பாலோருக்குப் புரியாத மர்மங்களாகவே இருக்கின்றன. மனிதன் எதற்காகச் சிந்திக்க வேண்டும், சிந்தனையில் கிடைக்கும் நன்மை என்ன எனும் வினாக்கள் அவர்களின் உள்ளத்தில் தோன்றுவதேயில்லை.

சிந்தனை சிறப்பிற்குரியதுதான். ஆனால் சிந்திப்பதற்கு மட்டும்தான் மனிதன் படைக்கப்பட்டிருக்கிறானா அல்லது அவனுடைய சிந்தனையிலிருந்து ஏதேனும் ஒரு குறிக்கோள் நிறைவேறப் போகிறதா, அப்படியானால் அந்தக் குறிக்கோள் என்ன எனும் பிரச்சினைகளைப் பெரும்பாலோர் ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்வதில்லை. இது உண்மையில் வரவேற்கத் தகாத ஒரு நிலை; வருந்தத் தக்க ஒரு சூழல்.

இவை அனைத்தையும் இங்கு நாம் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும். எனவே எல்லாப் பிரச்சினைகளுக்கும் முன்னால் இப்போது நான் 'சிந்தனையின் சிறப்பை'த் தெளிவுபடுத்தப் போகிறேன். அடுத்துச் 'சிந்தனையின அடிப்படை'க்கு வருவோம். அப்புறம் 'சிந்தனையின் குறிக்கோள்' நம் சிந்தனைக்கு வரும் - இன்ஷா அல்லாஹ்!

**–அபூஹாமித் அல்-கஸ்ஸாலி**

# 1

# சிந்தனையின் சிறப்பு

திருக்குர்ஆனில் சிந்தனையும் ஆராய்ச்சியும் எண்ணற்ற இடங்களில் வலியுறுத்தப்படுகின்றன. எத்தனையோ இடங்களில் இறைவன் மனிதனைச் சிந்திக்கத் தூண்டுகிறான்; சிந்தனையாளர்களைப் பாராட்டுகிறான்.

''நின்று கொண்டும் உட்கார்ந்து கொண்டும் படுத்துக் கொண்டும் அவர்கள் இறைவனைப் பற்றிச் சிந்திக்கிறார்கள். விண்ணகம், மண்ணகம் பற்றிச் சிந்திக்கும் அவர்கள் 'எங்கள் நாயகனே! இவற்றையெல்லாம் நீ வீணாகப் படைக்கவில்லை!' என்று கூறுகிறார்கள். சிந்தனைச் செல்வர்களுக்கு இந்தப் பாராட்டுரை ஒன்று போதாதா? இறைவனை அறியத் துடிக்கிறவர்கள் முதலில் அவனுடைய படைப்பினங்களைப் பற்றி ஆராய வேண்டும் எனும் உண்மையை இந்த இறைவசனம் தெளிவுபடுத்துகிறது.

இதற்கு ஆதாரமாக இடம் பெறுகிறது அடியிலுள்ள சம்பவம். பெருமானாரின் காலத்தில் சிலர் இறைவனைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்குப்

பெருமானார் இப்படித் தீர்ப்பு வழங்கினார்கள். ''இறைவனைப் பற்றிச் சிந்திக்காதீர்கள். உங்களால் அவனை முறைப்படி அறிந்து கொள்ள முடியாது. எனவே இறைவனது படைப்பினங்களைப் பற்றிச் சிந்தியுங்கள்!''- இந்தத் துணுக்கு இப்னு அப்பாஸிடமிருந்து நமக்குக் கிடைத்திருக்கிறது.

''நீங்கள் ஏன் பேசாமல் வாயை மூடிக் கொண்டு உட்கார்ந்திருக்கிறீர்கள்?'' என்று பெருமானார் கேட்டார்கள்.

''நாங்கள் இறைவனின் படைப்பினங்களைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கிறோம்!'' வாயை மூடிக் கொண்டிருந்தவர்கள் வாயைத் திறந்து பதில் சொன்னார்கள்.

பெருமானாரின் முகம் மலர்ந்தது ''அப்படித்தான் செய்யுங்கள்! இறைவனின் படைப்பினங்களை ஆராயுங்கள்; இறைவனைப் பற்றி ஆராயாதீர்கள்! இந்த மண்ணகத்தின் ஒரு மூலையில் ஒரு சமுதாயத்தினர் வாழ்கிறார்கள். அவர்கள் கால் வினாடி நேரமும் இறைவனுக்கு மாறுபாடு செய்வதில்லை!''

''நாயகம் அவர்களே! அப்படியானால் அவர்களுக்கு மத்தியில் 'ஷைதான்' எனப்படும் தீய சக்தியே கிடையாதா?'' என்று கேட்டார்கள் எதிரிலிருந்தவர்கள்.

''அதை அவர்கள் நினைத்தும் பார்ப்பதில்லை. அப்படி ஒன்று படைக்கப்பட்டிருக்கிறது என்றே அவர்களுக்குத் தெரியாது!'' - இது பெருமானாரின் விடை.

''அவர்கள் மனிதர்கள்தானா ஆதம் நபியின் சந்ததியினர்தானா?''



''ஆதம் என்று ஒருவர் படைக்கப்பட்டாரா, இல்லையா என்றும் அவர்களுக்குத் தெரியாது!''

மனிதர்களில் எத்தனையோ விதத்தினர் இருக்கிறார்கள் என்பதை இந்தக் கருத்து நமக்குச் சுட்டிக் காட்டுகிறது.

உங்கள் சிந்தனைக்கு இதோ மற்றொரு சம்பவத் துணுக்கு:

''உபைத்! நீங்கள் ஏன் தினம் இங்கு வருவதில்லை?'' என்று அன்னை ஆயிஷா கேட்டார். திரைக்குப் பின்னால் ஆயிஷா நிற்க, திரைக்கு வெளியே நபித் தோழர்கள் அதாவும் உபைதும் நின்றார்கள்.

''காரணம் இருக்கிறது. 'தினசரி சந்திக்க வேண்டாம். ஒரு நாள் விட்டு மறுநாள் சென்று சந்தியுங்கள்' என்று பெருமானார் கூறியிருக்கிறார்கள் அல்லவா? அதனால்தான்!''

சிந்திக்க வந்திருந்த நபித் தோழர்கள் பெருமானாரின் வாழ்வு குறித்து வினவினார்க்ள. ''பெருமானாரிடம் நீங்கள் கண்ட அற்புதத்தைக் கொஞ்சம் கூற முடியுமா?''

அன்னையாரின் விடை: ''அவர்களது வாழ்வு முழுவதும் அற்புதம்தான்!'' இப்படி ஆரம்பித்த அன்னை ஆயிஷா முக்கியமான ஒரு சம்பவத்தை நபித் தோழர்களுக்கு விளக்கினார்.

அன்று ஓரிரவு பெருமானார் ஆயிஷாவிடம் வந்தார்கள். இருவரும் உரையாடிக் கொண்டிருந்தார்கள். அன்னையாரின் மேனி அண்ணலாரின் மேனியைத் தொட்டது.

திடீரென்று பெருமானார் எதையோ நினைத்துக் கொண்டவர் போல் விறுக்கென்று எழுந்தார்கள். ''நான்

என்னுடைய நாயனை வணங்கப் போகிறேன்!'' என்றார்கள். கை. கால், முகம் முதலியவற்றைக் கழுவிக் கொண்டு இறை வணக்கத்தில் ஈடுபட்டார்கள். கண்களிலிருந்து பொங்கிய கண்ணீர் அவர்களின் தாடியை நனைத்தது. அவர்கள் தம் சிரத்தைக் கீழே வைத்தபோது திரை நனைந்தது.

அப்போது அங்கு வந்த நபித்தோழர் பிலால் காலைத் தொழுகைக்கு நேரம் வந்து விட்டது என்பதைத் தெரி வித்தார். அவர் பெருமானாரையும் அவர்கள் வணங்கிய இடத்தையும் மாறி மாறிப் பார்த்தார்.

''நாயகம் அவர்களே! தாங்கள் ஏன் அழ வேண்டும்? தங்களின் சிறிய - பெரிய குற்றங்கள் அனைத்தையும் மன்னித்து விட்டதாக இறைவன் கூறுகிறானே! தாங்கள் அழ வேண்டிய தேவைதான் என்ன?''

கலங்கிய கண்கள் பிலாலைப் பார்த்தன. புன்னகையைக் கற்றுக் கொடுத்த பெருமானாரின் உதடுகள் இலேசாக விரிந்தன. ''பிலால்! நான் அழக கூடாதா? நான் ஏன் அழுகிறேன் என்று நீர் கேட்கிறீர். நான் ஏன் அழக் கூடாது என்று நான் கேட்கிறேன். இன்றிரவு இறைவனிட மிருந்து எனக்கு ஒரு செய்தி வந்திருக்கிறது. 'விண் - மண்ணின் படைப்பிலும் இரவு-பகல் மாறுவதிலும் புத்திசாலிகளுக்குப் படிப்பினை உண்டு' என்று இறைவன் கூறுகிறான்... இவை சிந்தனைக்குரியவை. இவற்றைச் சிந்திக்காமல் ஓதுகிறவர் களுக்குக் கொடிய தண்டனை யுண்டு!''

அபூதர் எனும் நபித் தோழர் பற்றிய ரசமான குறிப்பு அடியில் இடம் பெறுகிறது. அவர் இறந்து சிறிது நாட் களுக்குப் பின்னர் பஸ்ராவாசி யொருவர் அபூதரின் மனைவியைப் பேட்டி கண்டார். 'நண்பர் அபூதரைப் பற்றிக்



கொஞ்சம் சொல்கிறீர்களா? எத்தகைய வணக்கத்தில் அவர் அதிகமாக ஈடுபட்டார்.

அந்தப் பெண்மணி தம் கணவரைப் பற்றிய உண் மையை வெளியிட்டார்: ''அவர்கள் பகல் முழுவதும் வீட்டின் மூலையில் உட்கார்ந்து சிந்தனை செய்து கொண்டிருப்பார்கள்...''

ஹஸன் பஸ்ரீ குறிப்பிடுகிறார்: ''ஒரு வினாடி நேரச் சிந்தனை ஓர் இரவு வணக்கத்தை விடச் சிறந்தது!''

''சிந்தனை என்பது ஒரு கண்ணாடி!'' என்கிறார் அறிஞர் புஸைல். ''அது நீ செய்த நன்மைகளை மட்டுமின்றி, நீ புரிந்த குற்றங்களையும் தெளிவாகக் காட்டும்!'' தன்னைப் பற்றிய தவறுகளை ஒரு மனிதன் நன்கு தெரிந்து கொண்டு விட்டால் அப்புறம் அவனுடைய முன்னேற்றத்தை யாரால் தடுக்க முடியும்!

''நீங்கள் ஏன் இப்படி எந்த நேரமும் சிந்திக்கிறீர்கள்?'' என்று இப்ராஹீம் பின் அத்ஹம் வினவப்பட்டார்.

''ஏன் தெரியுமா? சிந்தனையிலிருந்துதான் பகுத்தறிவு வளர்கிறது. சிந்தனையற்றவர்களால் பகுத்தறிந்து செயல்பட முடியாது. பகுத்தறிந்து செயலாற்றிய அனைவரும் சிந்தனையாளர்கள் தான்!''

சிந்தனை செய்யும் மனிதனுக்கு, கண்டவை அனைத்தும் படிப்பினை - என்று ஒரு கவிஞர் பாடினார். இந்தப் பாட்டின் பொருளே உருவம் தாங்கி வந்தது போல் சுப்யான் பின் உயைனா நடந்து கொண்டார். கண்டவை, கேட்டவை, உணர்ந் தவை அனைத்தையும் அவர் சிந்தித்தார். அவை ஒவ்வொன றும் அவருக்குப் படிப்பினையைக் கொடுத்தன.

ஈஸா நபியர்கள் விடையளித்தார்கள்.

''உங்களைப் போன்ற சிறப்புள்ள மனிதன் இந்த உலகில் வேறு யாரேனும் இருக்க முடியுமா?'' என்று நண்பர்கள் கேட்டார்கள்.

''ஏன் இருக்க முடியாது? அப்படி யாரேனும் இருந்தால் அவன் குணம் எப்படியிருக்கும் தெரியுமா? அவனுடைய பேச்சில் இறைதியானம் கலந்து நிற்கும். அவன் வாயை மூடிக் கொண்டு உட்கார்ந்திருக்கும் போது அவனுடைய உள்ளத்தில் சிந்தனை நிரம்பி நிற்கும். அவன் பார்வை அவனுக்குப் படிப்பினை கொடுக்கும். இப்படி ஒரு மனிதன் இருந்தால் அவன் என்னைப் போன்றவன்!''

அறிஞர் லுக்மான் தனியே உட்கார்ந்து சிந்தித்துக் கொண்டிருந்தார்.

''லுக்மான்! நீர் ஏன் இப்படித் தனியாக உட்கார்ந் திருக்கிறீர்? நாலு பேருடன் சேர்ந்து உட்கார்ந்தால் நல்ல தல்லவா?'' என்று கேட்டார் அவரது எஜமானர்.

லுக்மானின் விடை: ''தனித்து உட்கார்ந்திருப்பது சிந்தனைக்குரிய சூழலை ஏற்படுத்துகிறது. ஒரு மனிதன் தொடர்ந்து சிந்தனை செய்தால் அதுவே வெற்றிக்குரிய வழி!''

''இறைவனின் பேராற்றலைப் பற்றி மக்கள் சிந்தனை செய்து பார்த்தால் அவர்களால் முரண் வழியில் நடக்கவே முடியாது!'' என்கிறார் பிஷ்ர்.

இப்னு அப்பாஸ் கூறுகிறார்: ''சிந்தனையில் தோய்ந்த உள்ளத்தோடு இரண்டு 'ரகஅத்' தொழுவது, மனப்பற்றுதல்



இல்லாமல் ஓர் இரவு முழுவதும் தொழுவதை விடச் சிறந்தது. நல்ல காரியத்தை நீங்கள் சிந்தித்தால் அந்தச் சிந்தனை உங்களை நன்மையின் பக்கம் இழுக்கும். தீயவை பற்றிய சிந்தனை அவற்றில் வெறுப்பை ஏற்படுத்தும்!''

''உங்கள் கண்களில் கண்ணீர் நிற்கட்டும், உங்கள் உள்ளத்தில் சிந்தனை நிரம்பட்டும்'' என்கிறார் அபூ சுலைமான். ''உலகைப் பற்றிய சிந்தனை ஆத்மீக வாழ்வுக்குத் திரை போட்டு விடுகிறது. மறுமை பற்றிய சிந்தனை அறிவுக்கு வித்திடுகிறது; உள்ளத்துக்கு உயிர் கொடுக்கிறது'

தாவூத் தாயீ ஒரு நாள் மாடியில் உட்கார்ந்து விண்ணகப் பற்றியும் ஆவியுலகம் பற்றியும் சிந்தித்துக் கொண்டிருந்தார். அவரது கண்கள் கலங்கியிருந்தன. சிந்தனையில் ஆழ்ந் திருந்த அவர் மாடியிலிருந்து கீழே விழுந்து விட்டார்.

நள்ளிரவு நேரத்தில் யாரோ முற்றத்தில் குதித்தாற் போல் இருந்ததால் அடுத்த வீட்டுக்காரர் கையில் வாளுடன் அலறிப் புடைத்துக் கொண்டு எழுந்தார்; திருடன் என்று அவர் எண்ணியிருக்க வேண்டும்.

''தாவூத்! நீங்களா! மேலிருந்து விழுந்து விட்டீர்களா?'' என்றார் அடுத்த வீட்டுக்காரர்.

தாவூத் திடுக்கிட்டார். தம்மை உற்றுப் பார்த்தார். தம்மைச் சுற்றிலும் பார்வையை ஓட்டினார். எதிரில் வாளும் கையுமாக நின்று கொண்டிருந்த அடுத்த வீட்டுக்காரரைப் பார்த்தார். ''ஆ! நான் விழுந்து விட்டேனா! இப்போதுதான் அதை உணர்கிறேன்! என் சிந்தனையை நீர் கலைத்து விட்டீர்!'' என்று சொல்லிக் கொண்டே மெதுவாக எழுந்து நின்றார்.

ஆழ்ந்த சிந்தனைப் போதையில் சிக்கிக்கொண்டிருப்ப வர்களால் எந்தத் துன்பத்தையும் மறக்க முடியும் எனும் உண்மையை இந்தச் சம்பவம் நிரூபித்துக் காட்டுகிறது.

இமாம் ஷாபி (ரஹ்) அவர்களின் கருத்து அடியில் இடம் பெறுகிறது. ''பேச்சினால் விளையும் விபரீதங்களைத் தடுப்பதற்கு மௌனம் ஒன்றே சிறந்த வழி. ஆழ்ந்த தத்துவங்களையும் உயர்ந்த சட்டங்களையும் உருவாக்க வேண்டும் என்று நீங்கள் ஆசைப்படுகிறீர்களா? அப்படி யானால் ஆழ்ந்து சிந்தனை செய்யுங்கள். எதைச் செய்வதாயினும், செய லாற்றத் தீர்மானிக்கு முன் ஆழ்ந்து சிந்தனை செய்யுங்கள். செயலாற்றுவதற்கு முன் அனுபவம் பெற்றவர்களிடம் கலந்து ஆலோசனை செய்யுங்கள். சிறப்புக் குணங்கள் நான்கு: தெளிந்த ஞானம் அவற்றில் முந்தியது. இது சிந்தனையால் உருப் பெறுகிறது. இரண்டாவதாக ஒழுக்கம். காமத்தை முறைப்படி பயன் படுத்துவதால் இது உண்டாகிறது. மூன்றாவதாக இடம் பெறுவது ஆற்றல். இது சினத்தை அடக்கியாள்வதால் தோன்றுகிறது. கடைசியாக நீதி, இது மன உணர்ச்சி களுக்குக் கட்டுப்பாடு விதிப்பதால் ஏற்படுகிறது!''

சிந்தனை குறித்து அறிஞர் பெருமக்களின் கருத்துக்கள் மேலே இடம் பெற்றிருக்கின்றன. அவர்கள் அனைவரும் சிந்தனை குறித்து உயர்ந்த கருத்துக்களை வெளியிட்டிருக் கிறார்கள். ஆனால் சிந்தனை என்றால் என்ன, அது எங்கிருந்து உற்பத்தியாகி எப்படி இயங்குகிறது என்னும் விவரங்களை அவர்களில் யாரும் தெளிவுபடுத்தவில்லை.

2

# சிந்தனை என்றால் என்ன?

இது நாம் முதலில் தெரிந்து கொள்ள வேண்டிய ஒரு வினா. நமக்குத் தெரிந்திருக்கும் விவரங்களை வைத்துக் கொண்டு தெரியாத ஒன்றைத் தெரிந்து கொள்ள முயன்றால், இந்த முயற்சிக்குப் பெயரே சிந்தனை.

ஒரு மனிதன் மறுமை பற்றியும் தெய்வீகம் பற்றியும் அறிய ஆசைப்படுகிறான். ஆனால் இவை அவனுக்குப் பழக்கமில்லாதவை; முற்றும் புதியவை. எனவே எடுத்த எடுப்பில் அவனால் அவற்றைப் பற்றி எந்தத் தீர்மானத் திற்கும் வர முடியாது.

அவன் உலகையும் அதில் நிலவும் சூழல்களையும் கண்கூடாகப் பார்க்கிறான். நேற்று இருந்தவர்கள் இன் றைக்கு இறந்து போவதைப் பார்க்கிறான். ஐம்பது ஆண்டுகளுக்கு முன் இருந்தவர்களில் பலர் இன்றைக்கு இறந்தவர்களின் பட்டியலில் இருக்கிறார்கள் என்பதை அவன் உணர்கிறான்.

எனவே ஒரு மனிதன் எப்படி வாழ்ந்தாலும் என்றாகிலும் ஒரு நாள் அவன் இறந்துதான் ஆக வேண்டும். ஏனெனில் அவனுடைய உடல் அழிவுக்கு நிலைக்களனான ஒன்று.

ஆகவே உலக வாழ்க்கை என்பது விரைவில் அழியக் கூடிய- அழிய வேண்டிய ஒன்று எனும் முடிவுக்கு அவன் வருகிறான். இது அவனுக்குத் தெரிந்த விவரம். பிறந்தவர்கள் இறந்துதான் ஆகவேண்டும் எனும் உண்மையை யாரும் மறுப்பதில்லை.

ஆனால் மறுமை வாழ்க்கை முற்றிலும் மாறுபட்டது. அந்த ஆத்மீக வாழ்க்கை கால வரம்பின்றி நீடித்து நிற்கக் கூடுயது. இதுவும் அவனுக்குத் தெரிந்தது தான்.

இந்த இரண்டு உண்மைகளை - தனக்கு நன்றாகத் தெரிந்த உண்மைகளை அடிப்படையாக வைத்து அவன் மற்றொரு உண்மையைக் கண்டு பிடிக்கிறான். அவன் இப்படிச் சிந்திக்கிறான்: 'உலக வாழ்க்கை நிலையற்றது. அதை நம்பிக் கொண்டு எதுவும் செய்ய முடியாது. உலக வாழ்வுக்கு அடிப்படையான உடல் என்றைக்கும் அழியக் கூடும். ஆனால் மறுமை வாழ்வு நேர் எதிரானது. அது என்றைக்கும் அழியாதது. எனவே இம்மையை விட மறுமை சிறந்தது. இம்மைக்குச் செயலாற்றுவதை விட மறுமைக்குச் செயலாற்றுவது சிறப்பு மிக்கது!''

இதுதான் சிந்தனை. சிந்தனையிலிருந்து அறிவு வளர்கிறது. இப்படி ஒரு மனிதன் சிந்தனையில் தொடர்ந்து ஈடுபடும் போது அவனுடைய அறிவு நாளுக்கு நாள் பெருகுகிறது. இதனால் ஆழ்ந்து சிந்தனை செய்கிறவர்கள் ஆழமான அறிவைப் பெறுகிறார்கள்.



ஆனால், இப்படிச் சிந்தனை செய்து புதிய அறிவு பெறுவது எல்லோருக்கும் சாத்தியமில்லை. வியாபாரத் திற்கு மூலதனம் தேவைப்படுவது போல் இந்தச் சிந்த னைக்கு ஓரளவு ஞானம் வேண்டும். இல்லையேல் அறிவு பெருக முடியாது - மூலதனம் இல்லாமல் லாபத்தை எதிர்பார்க்க முடியாதது போல்.

சிலர் தேவையான மூலதனம் வைத்திருக்கிறார்கள். ஆனால் அதனை முறைப்படி செலவிடாததால் அவர்களால் லாபத்தை எதிர்பார்க்க முடிவதில்லை. இதே போன்று சிலரிடம் அடிப்படையான ஞானம் உண்டு. என்றாலும், அதை அவர்கள் முறைப்படி சேர்ந்து வைத்துச் சிந்திப் பதில்லை. எனவே அவர்களின் அறிவு சிறிதும் முன்னேற்றம் காணாமல் ஒரே நிலையில் தேங்கி நிற்கிறது.

அப்படியானால் எடுத்துக் கொண்ட பிரச்சினை குறித்துச் சிந்தித்து ஒரு முடிவுக்கு வருவதுதான் எப்படி?

சிந்தனையிலிருந்து பயனுள்ள அறிவை வெளியில் கொண்டு வருவது தனிப்பட்டதொரு கலை. சிலருக்கு இயற்கையிலேயே இந்தக் கலையில் தேர்ச்சி ஏற்படுகிறது. இது ஓர் இறையருள். இறைத் தூதர்கள் எல்லோரும் இப்படித்தான் தேர்ச்சியடைந்தார்கள். எனவே அவர்களின் சிந்தனை வலிமை மிக்கது. அவர்களைத் தவிர்த்து மற்ற வர்களிடம் இத்தகைய ஆற்றலைக் காண்பது அரிது.

வேறு சிலர் ஒரே பிரச்சினையைத் திரும்பத் திரும்ப ஆராய்வதன் மூலம் பயனுள்ள அறிவைப் பெறுகிறார்கள். இத்தகையவர்கள் மக்கட் திரளில் ஏராளம்.

சிந்தனை என்பது அறிவு வளர்ச்சிக்காக மேற் கொள்ளப்படும் ஒன்று என்பது உண்மைதான். என்றாலும் சிந்திக்கிறவர்கள் அனைவரும் தாம் பெற்ற அறிவுக்கு விளக்கம் கொடுத்து விடுவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. பல வேளைகளில் இது அசாத்தியமாகவும் போகலாம்.

'இம்மையை விட மறுமையே சிறந்தது' எனும் உண்மையை எத்தனையோ பேர் தெரிந்து வைத்திருக் கிறார்கள். அதில் அவர்களுக்கு நம்பிக்கையும் உண்டு.

''மறுமையே சிறந்தது என்பதற்கு ஆதாரம் என்ன?'' என்று கேட்டுப் பாருங்கள். அவர்களில் பெரும்பாலோர் சரியான விடை தர முடியாமல் திணறுவார்கள். ஏனெனில் இந்த அறிவு சிந்தனையிலிருந்து உருவானதுதான் என்றாலும், அது எப்படி உருவானது என்று அவர்களுக்கே தெரியாது. சில வேளைகளில் சிந்திப்பவர்களுக்கே தெரி யாமல் அவர்களது உள்ளத்தில் நல்லறிவு புகுந்து விடுகிறது.

கல்லையும் இரும்புத் துண்டையும் மோதியடித்து நெருப்புத் தயாரிக்கிறார்களே சிலர், அதை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? திக்கு திசை தெரியாமல் இருளில் அகப்பட்டுக் கொண்டவன் அப்படிச் செய்கிறான். திடீரென்று கவிந்த இருள் அவனுடைய பார்வைக்குத் திரைபோட்டு விட்டது. எதிரில் இருப்பது என்ன,அருகில் நெளிவது என்ன என்று அவனுக்குத் தெரியவில்லை.

எனவே தன்னிடமுள்ள கல்லையும் இரும்புத் துண்டையும் மோதியடிக்கிறான். அதில் ஏற்பட்ட பொறி சிறிதளவு ஒளி கொடுக்கிறது. அந்த ஒளியில் அவன்



தன்னைச் சுற்றியுள்ளவற்றைப் பார்த்துக் கொள்கிறான். எதிரிலிருப்பது தான் செல்ல வேண்டிய வழி என்றும் தனக்கு அருகில் நெளிவது நச்சரவம் என்றும் அவனுக்குப் புலப்படுகிறது. பிந்தியதைத் தவிர்த்து முந்தியதுக்குத் தயாராகிறான்.

இதே போன்றது தான் சிந்தனை. மேலே நான் குறிப் பிட்டது போல் இரண்டு அறிவுகளை வைத்து, அவற்றை முறைப்படி மோதியடிக்கும் போது மூன்றாவது அறிவு கிடைக்கிறது. சிந்தனை பெருகும் போது அறிவு வளர்கிறது. ஒரு மனிதனுடைய அறிவும் தெளிவும் வளரும் போது அவனுடைய மனநிலையில் வரவேற்கத் தகுந்த பல மாறுதல்கள் தோன்றுகின்றன. எனவே அவன் முன்னர் செய்திராத பல நற்காரியங்களைச் செய்கிறான்; எண்ணற்ற சாதனைகளை வெளியில் கொண்டு வருகிறான்.

ஆகவே நற்செயல்கள் அத்தனைக்கும் - சாதனைகள் அனைத்துக்கும் சிந்தனையே ஆணிவேர். சிந்தனை இல்லையேல் அறிவில் தெளிவு இருக்காது. தெளிந்த அறிவு இல்லையேல், மனநிலையில் மாறுதல் ஏற்படாது. மனநிலை மாறவில்லையேல், முரண்வழியில் நடப்பவன் நல்வழிக்குத் திரும்ப மாட்டான்; இம்மையை விரும்பு கிறவன் மறுமைக்கு ஆசைப்பட மாட்டான். ஏனெனில் ஒவ்வொரு மனிதனும் தன் உள்ளத்தின் கட்டளையை மீற முடியாதவனாக இருக்கிறான்.

இந்த விளக்கத்திலிருந்து சிந்தனையின் சிறப்பு எத்தகையது என்பதை நீங்கள் உணர்ந்து கொண்டு விடலாம்.

எனவே சிந்தனையில் கிடைக்கும் நன்மைகள் மூன்று: அறிவு, மாறுதல் பெற்ற மனநிலை, நற்செயல். ஆனால்

இந்த மூன்றில் மிக முக்கியமானது அறிவு. அது ஒன்று இருந்தால் போதும்; மற்ற இரண்டும் தானாக வந்து விடும். நல்லறிவு பெற்றவனின் மனத்தில் தீய சிந்தனைகள் உருவாக முடியாது. தீய எண்ணம் இல்லாதவன் என்றைக்கும் தீய செயலில் இறங்க மாட்டான். ஏனெனில் எண்ணமே செயலை உருவாக்குகிறது. எண்ணத்தில் இல்லாத ஒன்று என்றைக்கும் செயலில் வர முடியாது.

நீங்கள் கேட்கலாம்: ''அறிவுகள் எத்தனையோ கோடி. மனிதனின் மனத்தில் தோன்றும் மாறுதல்களுக்கும் அளவில்லை. அப்படியானால் சிறந்த அறிவு எது? சிறந்த மனநிலை எது? எத்தகைய சிந்தனை நேர்மைக்கு வழி காட்டக் கூடியது?''

உண்மைதான். இதோ சிக்கலை அறுப்பதற்கு நான் முயற்சி செய்கிறேன். நல்லறிவுக்குத் துணை செய்யும் அறிவுகள் யாவை, இறை வழி நடந்த முன்னோர் எத்தகைய மனநிலையைப் பெற்றிருந்தார்கள். அதை அடையும் வழி என்ன என்பன போன்றவற்றை விளக்குகிறேன்.

இந்த வழியில் ஓரளவுதான் விளக்கம் கொடுக்க முடியுமே தவிர, இந்தப் பிரச்சினைகளின் உட்பிரிவுகள் அத்தனைக்கும் என்னால் விளக்கம் கொடுக்க முடியாது. எனினும் அவற்றில் சிலவற்றை நான் விரிவாக ஆராயப் போகிறேன்.

❁

3

# சிந்தனைக்குரியவை

**சி**ந்தனைகள் பலதரப்பட்டாலும் அவற்றைக் குறிப்பாக இரண்டு வகைகளில் கட்டுப்படுத்தலாம். ஒன்று மார்க்கத்துடன் தொடர்புள்ள சிந்தனை. மற்றொன்று, மார்க்கத்துக்கு சம்பந்தமில்லாத சிந்தனை. ஆனால் இந்த இரண்டில் நம் கவனத்திற்குரியது முந்தியது. ஏனெனில் இந்த நூல் மார்க்கத்தின் அடிப்படையில் உருவாக்கப் படுகிறது. எனவே பிந்தியதை நாம் விட்டுவிட்டோம்.

மார்க்கத்துடன் தொடர்புள்ள சிந்தனை என்றால் என்ன? இறை வழியில் மனிதனுக்கு ஏற்படும் சூழல்களைப் பற்றிய சிந்தனையையே நான் இப்படிக் குறிப்பிடுகிறேன். இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையில் உருவாகும் இந்தச் சிந்தனையை மற்ற அனைத்தையும் விடச் சிறந்தது என்று குறிப்பிடலாம்.

பேரன்பு கொண்ட கணவன் ஒருவனை இங்கு நாம் உவமானமாக எடுத்துக் கொண்டால் நல்லது என்று நினைக் கிறேன். அவனுடைய சிந்தனை நான்கு கோணங்களி லிருந்து உருப்பெறுகிறது.

**ஒன்று:** கணவன் என்ற முறையில் அவன் தன்னைப் பற்றிச் சிந்திக்கிறான். தனக்கும் தன் மனைவிக்கும் இடையிலுள்ள நட்புக்குத் துணை செய்யும் குணங்கள் தன்னிடம் இருக்கின்றனவா என்று ஆராய்கிறான். அவற்றை மேலும் வளர்க்க முயற்சி செய்கிறான்.

**இரண்டு:** தன் மீது தன் மனைவிக்கு வெறுப்பு ஏற்படுத்தும் குணங்கள் தன்னிடம் இருக்கின்றனவா என்று அவன் சிந்தனை செய்கிறான். தன் குணத்தையும் செயலையும் முறைப்படி சீர்திருத்திக் கொள்கிறான்.

**மூன்று:** அவன் தன் மனைவியின் புற அழகைப் பற்றிச் சிந்திக்கிறான். வளைந்து நிற்கும் புருவங்களையும் சிவந்திருக்கும் உதடுகளையும் அவன் எண்ணிப் பார்க்கிறான். இத்தகைய எண்ணங்கள் அவன் நெஞ்சத்தில் இனிப்பைத் தெளிக்கின்றன. அவளை நேரில் காணும் போது மட்டுமின்றி, கற்பனையில் எண்ணும் போதும் அவனுக்கு இன்பம் ஏற்படுகிறது.

**நான்கு:** தன் மனைவியின் திறமையையும் தன்மீது அவன் வைத்திருக்கும் அன்பையும் அவன் எண்ணிப் பார்க்கிறான். அவளுடைய அருங்குணங்களுக்கு விளக்கம் போல் அவ்வப்போது அவள் கூறிய வார்த்தைகளையும் செய்த செயல்களையும் அவன் எண்ணிப் பார்க்கிறான்.

பேரன்பு கொண்ட காதலனின் மனநிலை இப்படித்தான் இருக்கும். இந்த நான்கையும் தவிர்த்து வேறு எந்தச் சிந்தனைக்கும் அவன் மனத்தில் இடம் இருக்காது. இந்த நான்கையும் கடந்து வேறொரு விவரத்தைப் பற்றி அவன் ஆழ்ந்து சிந்தனை செய்தால் அவன் உள்ளத்தில் முழுமையான காதல் கிடையாது என்பதே பொருள்.



சிந்தனை ஒரு மனிதனின் உள்ளத்தில் எப்படி ஆட்சி செலுத்துகிறது என்பதை நாம் தெரிந்து கொள்வதற்கு இது மிகப் பொருத்தமான உவமானம் என்றே நான் நினைக்கிறேன். இதே உவமானத்தை ஆதாரமாக வைத்து நம்முடையபிரச்சினைக்கு நல்லதொரு முடிவு காண முடியும்.

காதல் கொண்டவனின் சிந்தனை எப்படி இருக்குமோ அப்படித்தான் இறையன்பர்களின் சிந்தனையும் இருக்கும்.

மேலே நான் சுட்டிக் காட்டியது போல் அவர்களின் சிந்தனை நான்கு கோணங்களிலிருந்து உருவாகும்.

1. இறைவனின் படைப்பு என்ற முறையில் அவர்கள் தம்மைப் பற்றியும் தம்மிடமுள்ள ஒழுக்க உணர்வைப் பற்றியும் சிந்தனை செய்கிறார்கள். இறைவனின் அன்பை ஈர்த்து வருவது எப்படி, அவனுடைய அருட்கொடைகளுக்கு அருகதை பெறுவது எப்படி என்றெல்லாம் அவர்கள் ஆராய்கிறார்கள். இந்தக் கட்டத்தில் அவர்கள் ஒழுக்கம் பற்றியும் நற் செயல் பற்றியும் சிந்திக்கிறார்கள். மனைவியின் முழு அன்புக்கு அருகதையாவது எப்படி என்று கணவன் ஒருவன் ஆராய்வது போல், இறையன்பர்கள் இறைவனின் பேரன்பைப் பெறுவது எப்படி என்று ஆராய்கிறார்கள். இது அவர்களின் சிந்தனைக்கு முதற்கோணம்.

2. அடுத்து அவர்களின் சிந்தனை தம்மிடமுள்ள குறைகளையும் தாம் செய்த தவறுகளையும் அளந்து பார்க்க முயற்சி செய்கிறது. தீய குணமும் தீச்செயலும் இறைவனின் வெறுப்புக்குத் தூபம் போடுகின்றன என்று அவர்களுக்குத் தெரியும். எனவே அவர்கள் தம்மிடமுள்ள குறைபாடுகளையும் ஒழுக்கத்துக்கு மாறுபட்ட எண்ணங்

களையும் ஆராய்ந்து அவற்றைக் களைந்தெறிய முயற்சி செய்கிறார்கள்.

மனைவிக்காகக் கணவன் தன்னுடைய குணத்தை மாற்றிக் கொள்வது போல், அவர்கள் இறைவனுக்காகத் தீய உணர்வுகள் அனைத்தையும் - தீச் செயல்கள் அனைத்தையும் மாற்றிக் கொண்டு, முழுக்க முழுக்க இறைவனுக்காக வாழத் துவங்குகிறார்கள்.

இந்தக் கட்டத்தில் முரண்வழியைப் பற்றியும் தீய செயல்களைப் பற்றியும் சிந்திக்க வேண்டிய தேவை அவர்களுக்கு ஏற்படுகிறது. தீயவை யாவை, அவை எப்படி உருப்பெறுகின்றன என்று அவர்கள் ஆராய்ந்து நல்லதொரு முடிவுக்கு வருகிறார்கள்.

இது சிந்தனைச் செல்வர்களுக்கு இரண்டாம் கோணம்.

3. அடுத்து அவர்களின் சிந்தனை இறைவனைப் பார்த்துத் திரும்புகிறது - காதலனின் சிந்தனை காதலியைப் பார்த்துத் திரும்புவது போல், அவள் அழகை அவன் எண்ணிப் பார்த்து மகிழ்வது போல், அவர்கள் இறைவனின் படைப்புகளை எண்ணிப் பார்த்து இன்பமடைகிறார்கள். அவனுடைய படைப்புகளில் எல்லை காண முடியாத அழகை அவர்கள் பார்க்கிறார்கள். மரம், செடி, கொடி , மலை, கடல், உயிரினம் முதலிய அனைத்திலும் அவர்கள் நீங்காத அழகைக் காண்கிறார்கள். இது மூன்றாம் கோணம்.

4. இறுதியாக அவர்களின் சிந்தனை இறைவனின் பேராற்றலை ஆராய்கிறது - மனைவியின் - குணத்தைக் கணவன் ஆராய்வது போல், இறைவனின் சிறப்புக் குணங்களும் வரம்பு காண முடியாத அவனது ஆற்றல்களும்



அவர்களின் சிந்தனைக்கு வருகின்றன. அவனுடைய பெயர்கள், அவற்றில் மறைந்திருக்கும் பொருள்கள், அவனுக்கே உரித்தான வர்ணனைகள் முதலிய அனைத்தையும் அவர்கள் தம் சிந்தனைக்கு எடுத்துக் கொள்கிறார்கள். இது சிந்தனையின் கோணங்களில் இறுதியானது.

இறைவழி நடப்பவர்களின் சிந்தனை இந்த நான்கு கோணங்களுக்கும் அப்பாற் போக முடியாது. இந்த நான்கு விதங்களில் நீங்கள் இப்போது அனுபவிப்பது எது என்று பாருங்கள். இந்த எல்லைக்குள் தான் உங்கள் சிந்தனை இருக்கிறது என்று நம்பிக்கை ஏற்பட்டால் , நீங்கள் நிச்சயமாக இறையன்பர் தான்; இதில் சந்தேகமில்லை.

இப்போது, மேற்குறிப்பிட்ட நான்கு கோணங்களையும் சற்று விரிவாக ஆராய்வோம்.

இறைவனின் அன்புக்கு அருகதை பெறுவது எப்படி? இந்த வினாவை மையமாகக் கொண்டுதான் உங்களுடைய முதற் சிந்தனை ஆரம்பமாகிறது. எனவே உங்கள் மீது இறைவன் ஏற்படுத்தியிருக்கும் பொறுப்புகளை எண்ணிப் பாருங்கள். முதலில் உங்கள் சிந்தனையை ஐங்காலத் தொழுகைக்குத் திருப்புங்கள். அவற்றைக் குறைவின்றி நிறைவேற்றுவது எப்படி, நிறைந்த நெஞ்சத்தோடு- ஒருமித்த மனத்தோடு இறைவணக்கத்தில் ஈடுபடுவது எப்படி என்று சிந்தனை செய்யுங்கள். தேவையான நூல்களைப் படியுங் கள். தெரிந்தவர்களைத் தேடிப் பிடித்து விளக்கம் கேளுங்கள்.

இறைவணக்கம் பற்றிய சிந்தனை அனைத்துக்கும் முதலில் இருக்கட்டும். ஏனெனில் அதன் சிறப்பு மற்ற அனைத்தையும் விட உயர்ந்தது. உங்களுக்கு இறைவனின் அன்பைச் சம்பாதித்துத் தரும் ஆற்றல் அதற்குண்டு.

மனிதனுக்கு இறைவனால் கொடுக்கப்பட்ட அருட் கொடைகளில் சிறப்பு மிக்கது கண். சில வேளை படைப் பினத்தைப் பார்த்துப் படைத்தவனை அறியும் அது. வேறு சிலவேளை படைத்தவன் விரும்பாதவற்றைப் பயமின்றிப் பார்க்கிறது. திருமறையைப் பார்க்கும் அதே கண்கள் சிலவேளை இறை பக்தனின் பணியைக் குறைத்துப் பார்க்கின்றன. கனிவு சொட்டும் கண்கள் சில நேரங்களில் அனலைக் கக்குகின்றன.

எனவே இறைவணக்கத்திற்கு அடுத்த படியாக உங்கள் சிந்தனைக்குரியவை கண்களே. அகிலத்தையே அளந்து பார்க்கும் இந்தக் கண்கள் ஏன் படைக்கப்பட்டிருக்கின்றன என்று சிந்தனை செய்யுங்கள். அவை எதற்கென்று படைக் கப்பட்டனவோ அதற்கு அவற்றைப் பயன்படுத்துங்கள். இறைவன் கொடுத்த கண்களை அவன் விரும்பாத வழியில் செலுத்தும் உரிமை உங்களுக்குக் கிடையாது.

உங்கள் சிந்தனைக்கு இப்படி வேலை கொடுங்கள். ''விண்ணிலுள்ள விண்மீன்களையும் மண்ணிலுள்ள உள்ளமைகளையும் ஊடுருவிப் பார்த்து இறைவனை அறிவ தற்காகவே அவன் எனக்குக் கண்களைக் கொடுத்திருக்கிறான். திருமறையையும் திரு நபியின் செயல் முறைகளையும ஊன்றிப் பார்ப்பதற்காகவே அவை படைக்கப்பட்டிருக் கின்றன. என் கண்களுக்கு நான் இந்த விதத்தில் தான் வேலை கொடுக்க வேண்டும். அப்படி வேலை கொடுப்பது எனக்கு அசாத்தியமான காரியமுமல்ல. என்னால் விண்ணையும் மண்ணையும் ஊடுருவிப் பார்க்க முடியும்; திருக்குர் ஆனையும் திருநபியின் வாழ்க்கை முறையையும் ஊன்றிக் கவனிக்க முடியும்.



''ஆனால் நான் எப்படி இருக்கிறேன்? உண்மையில் அவற்றின் பக்கம் என் பார்வையைத் திருப்புகிறேனா? இல்லையே!

''அதோ இறைபக்தர் ஒருவர் சென்று கொண்டிருக்கிறார். அவர் இறைவனின் பேரன்புக்கு உரியவராக இருக்கக் கூடும். அவரை நான் கண்ணியத்தோடு பார்க்க வேண்டும். என் பார்வையில் மதிப்பும் மரியாதையும் கலந்து நிற்க வேண்டும்

''ஆனால் என்னுடைய மனநிலையில் ஏன் இப்படி மாற்றம் ஏற்பட்டிருக்கிறது? கண்ணியத்துக்குரியவரை என் கண்கள் ஏன் சுட்டு எரிக்கின்றன? அவரை பார்த்த மாத்தி ரத்தில் என் நெஞ்சம் ஏன் இப்படிக் கொதிக்கிறது?

''இதோ எதிரில் வருகிறானே ஒருவன், அவன் இறை வழிக்கு என்றுமே மதிப்புக் கொடுப்பதில்லை. நேர்மை யைப் பார்க்கும் போதெல்லாம் அவன் முகத்தில் ஆழமான வெறுப்பு நிழலிடுவதை நான் கண்டிருக்கிறேன். தீய சிந்தனைக்குத் தன் வாழ்க்கையில் அவன் முதலிடம் கொடுத்திருக்கிறான் என்று எனக்கு நன்றாகத் தெரியும்.

''ஆனால் இப்படியிருந்தும் அவனை நான் ஏன் இன்னும்வெறுக்காமல் இருக்கிறேன்? அவனை பார்த்த மாத்திரத்தில் என் மனத்தில் மகிழ்ச்சி பொங்குகிறதே, காரணம் என்ன?...''

இவ்வாறு நீங்கள் சிந்தனை செய்த பிறகு உங்கள் செவியின் பக்கம் கவனத்தைத் திருப்புங்கள். அது இறைவனால் உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் ஒரு சொத்து. வீணான செய்தியையும் உணர்ச்சியைத் தூண்டும் கதைகளையும் கேட்பதற்காக அது படைக்கப்படவில்லை.

ஆழ்ந்த தத்துவங்களையும் வாழ்வுக்கு அழகு தரும் அறிவுரைகளையும் கேட்டுப் பயனடைவதற்காகவே அது படைக்கப்பட்டிருக்கிறது.

உங்களைப் பொருத்த மட்டில் இந்த இரண்டுமே சாத்தியம்தான். உங்களால் தீயதையும் கேட்க முடியும்; நல்லதையும் கேட்க முடியும். எனினும் இவற்றில் எதைக் கேட்க வேண்டுமோ அதைக் கேளுங்கள். எதைக் கேட்கக் கூடாதோ அதில் சிறிதளவும் உங்கள் செவிக்குள் நுழையக் கூடாது.

உங்கள் செவியுணர்வு பற்றிக் கொஞ்சம் சிந்தனை செய்து பாருங்கள்.

''செவிப் புலன் என்பது இறைவனின் அருட்கொடை களில்ஒன்று. செவிடர்கள் எத்தனையோ பேர் இருக்கும் போது இறைவன் எனக்குத் தெளிவான செவியைக் கொடுத்திருக்கிறான். அதுகுறித்து இறைவனுக்கு நான் நன்றி செலுத்த வேண்டாமா? நல்ல கருத்துகளுக்கும் திரு மறையின் விரிவுரைகளுக்கும் என் செவி மடுப்ப தில்லையே, இதற்குக் காரணம் என்ன? எனக்கேன் இந்த அவல நிலை ஏற்பட வேண்டும்? அவன் கொடுத்த செவிச் செல்வத்தை நான் பயனின்றிப் பாழ்படுத்துகிறேன். நன்றி செலுத்துவதற்குப் பதிலாக நான் மாற்றம் செய்கிறேன். நான் இப்படி நடந்து கொண்டிருந்தால் இறைவனின் அன்பு எனக்கு எப்படிக் கிடைக்க முடியும்...?''

இறைவன் மனிதனுக்குக் கொடுத்த செல்வங்களில் நாவும் ஒன்று.



''நாவு! அது என்னிடமும் இருக்கிறது. அந்தச் செல்வத்தை நான் முறைப்படி பயன்படுத்துகிறேனா? என்று நீங்கள் உங்கள் நெஞ்சைத் தொட்டுக் கேளுங்கள்.

''நாவை எத்தனையோ நல்ல காரியங்களுக்கு என்னால் பயன்படுத்த முடியும். அறியாதவர்களுக்கு அறிவுப் பணி புரியலாம். நல்ல வழியில் நடப்பவர்களுக்குப் பாராட்டு ரையால் உற்சாகம் கொடுக்கலாம். தீயவர்களைத் திருத்து வதற்கும் அதை என்னால் பயன்படுத்த முடியும். இனிய வார்த்தை பேசி சிரித்த முகத்துடன் வரவேற்பதற்குரியவர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள்.

''ஆனால், நான் என்ன செய்கிறேன்? என் பேச்சுத் திறனை நான் எப்படியெல்லாம் வீணாக்குகிறேன்! நல்வழிக்குப் பயன்பட வேண்டிய என்னுடைய நாவு தீய வழியில் இயங்குகிறதே, காரணம் என்ன? அதைத் திருத்தவே முடியாதா?''

இப்போது உங்கள் கவனத்திற்குரியது உங்களிடமுள்ள திரண்ட செல்வம். நல்வழியில் செலவிடுவதற்குப் பணமில் லையே என்று ஒரு சாரார் கவலைப்பட்டுக் கொண்டிருக்கும் அதே நேரத்தில், கையிலிருக்கும் பொருளை எப்படிச் செலவிடுவது என்று தெரியாமல் நீங்கள் திகைக்க வேண்டாம். அது சக்தி வாய்ந்த ஒன்று. அதனால் நன்மை மட்டுமின்றி தீமையும் விளைய முடியும். தீமையைத் தவிர்த்து நன்மைக்கு வித்திட்டுப் பயனடைய முயற்சி செய்யுங்கள்.

''என்னிடம் திரண்ட செல்வம் இருக்கிறது. அது இறைவன் எனக்களித்த அருட் கொடைகளில் ஒன்று. அதை

நான் முறைப்படி செலவிடுகிறேனா?'' என்று உங்களைப் பார்த்து நீங்களே கேட்டுக் கொள்ளுங்கள்.

''வறுமையின் கோரப் பிடியில் எத்தனையோ பேர் சிக்கிக் கொண்டிருக்கும் போது இறைவன்எனக்கு செல்வத்தைக் கொடுத்திருக்கிறான். அதன் உதவியால் எத்தனையோ நன்மைகளைச் செய்ய முடியும். பசியோடு வந்திருக்கும் ஏழைகளின் வேதனையை என் பணம் கால் வினாடியில் அழிக்கும்.

''தயாள சிந்தனையுள்ளவர்கள் இறைவனின் அன்பிற் குரியவர்கள் என்று எனக்குத் தெரியும். இந்தப் பெருமையை என்னால் அடைய முடியும். இறைவனிடம் எனக்குக் கிடைக்கும் பெருமை மற்ற அனைத்தையும் விடச் சிறந்தது. எனவே என் தேவைக்கு மிஞ்சிய செல்வத்தை யெல்லாம் நான் இறைவழிக்குச்செலவிடப் போகிறேன். தேவை யுள்ளவர்கள் என் செல்வத்தால் பயனடையட்டும்.

''தான தர்மத்திலேயே என் செல்வம் முழுவதும் அழிந்து விட்டால் அப்புறம் என்ன செய்வது என்று நான் கவலைப்படவில்லை, கொடுக்கும் இறைவன் என்றைக்கும் கொடுப்பான். நேற்றுக் கொடுத்தவன் நாளைக்கும் கொடுப்பான். எனவே இன்றைய செல்வம் மற்றவர் களுக்குப் பயன்படட்டும். நாளை எனக்குத் தேவை ஏற் பட்டால் அதனை முடித்துத் தரும் ஆற்றல் இறைவனிடம் உண்டு!''

- இப்படி எல்லா அவயங்களைப் பற்றியும் – எல்லாச் செல்வங்களைப் பற்றியும் சிந்தித்து முடித்த பிறகு இரண்டாம் சிந்தனைக்கு வாருங்கள்.



இறைவனின் வெறுப்பைத் தவிர்ப்பது எப்படி? இந்த வினாவை அடிப்படையாகக் கொண்டே இரண்டாம் சிந்தனை உருவாகிறது.

ஒவ்வொரு நாள் காலையிலும், தூக்கத்திலிருந்து கண் விழித்ததும் உங்கள் அவயவங்கள் பற்றிய விசாரணையில் ஈடுபடுங்கள். உங்கள் அவயவங்களில் ஏதேனும் ஒன்று தவறு செய்திருந்தால் அதற்கு இறைவனிடம் மன்னிப்புக் கேளுங்கள். அது தவறு செய்து கொண்டிருக்கிறது என்றால் அதனைத் தடுப்பதற்கு முயற்சி செய்யுங்கள். அது இனிமேல் தவறு செய்யக் கூடும் என்று அஞ்சுகிறீர்களா? அப்படியானால் நன்கு சிந்தித்துத் தற்காப்பு தேடிக் கொள்ளுங்கள்.

முதற்சிந்தனை எப்படியோ அப்படித்தான் இந்த இரண்டாம் சிந்தனையும். இறைவனின் அன்புக்கு அருகதை பெறுவது எப்படி எனும் வினாவிலிருந்து முதற் சிந்தனை துவங்குகிறது. இறைவனின் வெறுப்பைத் தவிர்ப்பது எப்படி என்பது இரண்டாம் சிந்தனையின் அடிப்படை. எனவே இந்தச் சிந்தனையைப் பற்றி அதிகம் எழுத வேண்டியதில்லை என்று நான் நினைக்கிறேன். முதற் சிந்தனையை அடிப்படையாக வைத்து இந்தச் சிந்தனையில் உங்களால் வெற்றியடைய முடியும் என்பது என் நம்பிக்கை.

நல்ல செயலே ஒரு மனிதனுக்கும் இறைவனுக்கும் இடையிலுள்ள தூரத்தைக் குறைக்கிறது. எனவே அது எல்லோராலும் என்றைக்கும் பாராட்டப்படுகிறது. இறை வனுடைய அன்புக்குப் பாடுபடுகிறவர்கள் நிரந்தரமாக நற்காரியங்கள் செய்கிறார்கள். நற்செயல் புரிகிறவர்களைத் திருக்குர் ஆன் உயர்த்திக் கணிக்கிறது.

நற்செயல்களை நல்லெண்ணங்கள் உருவாக்குகின்றன. தீய எண்ணத்திலிருந்து தூய செயல் உருப் பெற முடியாது. நற்செயல்கள் அத்தனைக்கும் நல்ல மனமே அடிப்படைக் காரணம். இதனால் நற்செயல் பாராட்டப்படுவது போல், அதனை உருவாக்கும் நல்லெண்ணமும் நற்பண்பும் பாராட்டப்படுகின்றன. ஒரு சமுதாயத்தில் நல்ல செயல்களையும் நேர்மைக்கு மாற்றமில்லாத சாதனைகளையும் உருவாக்க எண்ணுகிறவர்கள் முதலில் அந்தச் சமுதாயத்தினரின் உள்ளங்களில் தூய எண்ணங்களையும் பாராட்டுக்குரிய மனப் பண்புகளையும் உருவாக்க வேண்டும்.

செயல் எனும் மரத்துக்கு எண்ணம் என்பது வித்துப் போன்றது. வித்தின்றி மரம் முளைப்பது அசாத்தியம்.

ஆகவே, நீங்கள் இறைவனின் அன்புக்கு அருகதை பெற விரும்பினாலும், அவனுடைய வெறுப்பைத் தவிர்க்க விரும்பினாலும் நீங்கள் செய்ய வேண்டிய முதல் வேலை இதுதான்: உங்கள் மனத்தை உங்கள் குறிக்கோளுக்குத் தகுந்தபடி பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இந்தக் கட்டத்தில் மனிதனின் மனப்பண்பு இரண்டு கூறுகளாகப் பிரிகிறது. அவற்றில் ஒன்று, நற்செயலை உருவாக்கும் மனப்பண்பு. இது இறைவனின் அன்புக்கு வழி வகுக்கும். மற்றொன்று, தீய செயலை உருவாக்கும் மனப்பண்பு. இது இறைவனின் வெறுப்பைத் தேடித் தரும்.

இப்போது நாம் இந்த இரண்டையும் முறையே ஆராய்வோம்.

இறைவனின் அன்பை ஈர்த்து வரும் குணம் குறித்து நான் ஒன்றும் எழுதிக் காட்ட வேண்டியதில்லை. அது எல்லோருக்கும் தெரிந்ததுதான். நல்ல உணர்வு எது, தீய குணம் எது என்று தெரிந்து கொள்ளாதவர்கள் யார்! கொலையையும் கொள்ளையையும் நற்குணங்கள் என்று பாராட்டுகிறவர்களை உங்களால் என்றைக்கும் காண முடியாது!



தான் செய்த குற்றம் குறித்து வருந்தி வேதனைப் பட்டு, இனிமேல் அது போன்ற குற்றங்களைச் செய்வதில்லை என்று தீர்மானித்து, எல்லாம் வல்ல நாயனிடம் மன்னிப்புக் கேட்பது சிறந்த மனப் பண்பு. துன்பம் ஏற்படும் போது பொறுமையோடு இருப்பது, இறைவன் அளித்த அருட்கொடைக்கு நன்றி செலுத்துவது, இறைவனின் பேரன்பை எதிர்பார்த்தும் அவனுடைய தண்டனைக்குப் பயப்பட்டும் நற்காரியங்கள் புரிவது, உலகிலே பற்றற்று வாழ்வது முதலியவை உயர்ந்த பண்புகள்.

ஒருமித்த மனத்தோடு இறை வணக்கம் புரிவது, இறையன்பை மனத்தில் கொண்டு செயலாற்றுவது முதலிய அனைத்தும் உயர் குணங்களே.

இவை ஒவ்வொன்றுக்கும் நான் தனிப்பட்ட முறையில் ஒவ்வொரு நூல் எழுதியிருக்கிறேன். *'இஹ்யாவு உலூமித்தீன்' எனும் இந்தப் பெரு நூலில் நான்காம் பாகம் முழுவதையும் அந்தத் துணை நூல்கள் அடைத்துக் கொண்டிருக்கின்றன. உங்கள் கையிலிருக்கும் இந்த நூல் நான்காம் பாகத்தில் ஒன்பதாவது துணை நூலாக இடம் பெற்றிருக்கிறது. ஏனெனில் சிறந்த மனப் பண்புகளில் சிந்தனையும் ஒன்று.

---

* இறையச்சம், இறை திருப்தி, இறைசிந்தனை, பொறுமையாய் இரு, பாவமன்னிப்பு, நல்லெண்ணம் முதலிய நூல்கள் இந்த வரிசையில் வெளிவந்திருக்கின்றன.

உயர் குணங்கள் - நல்லெண்ணங்கள் பற்றிய முழு விவரங்களை உரிய இடங்களில் படித்துத் தெரிந்து செயலாற்ற முற்படுங்கள். அவற்றை எல்லாம் இங்கே மீண்டும் எழுதுவது தேவையில்லாத ஒன்று.

மேற்குறிப்பிட்ட குணங்கள் இறைவனின் அன்பைத் தேடித் தருகின்றன என்று நான் குறிப்பிட்டேன். எனவே அவற்றிற்கு எதிரான குணங்கள் அத்தனையும் இறைவனின் வெறுப்புக்கு வழிகாட்டுகின்றன.

பெருமை, பொறாமை, முகஸ்துதி, கடுஞ்சினம், எல்லை மீறிய காமம், பொருளாசை, பதவி மோகம், புறம் முதலியவை தீய குணங்கள். இவற்றைப் பற்றிய முழு விவரம், 'இஹ்யா'வின் மூன்றாம் பாகம் முழுதையும் அடைத்துக் கொண்டிருக்கிறது.*

அங்கு உங்களுக்குத் தேவையான விளக்கம் முழுவதும் கிடைக்கும் என்று நான் நம்புகிறேன். உங்களிடமுள்ள குறைகளையும் கோளாறுகளையும் அவை உங்களுக்குத் தெளிவுபட விளக்கும் என்பது என் துணிபு.

❁

* புறம் பேசாதே, கோபம் வேண்டாம், பொறாமை கொள்ளாதே, பதவி மோகம் - இந்த நூல்கள் ஏற்கனவே வெளி வந்து விட்டன.

# 4

# சிந்தனையும் தெய்வீகமும்

மனிதனின் சிந்தனை இறைவனைப் பற்றியும் வரம்பு கட்ட முடியாத அவனது ஆற்றல்களைப் பற்றியும் ஆழ்ந்து பார்க்கும் போது தெய்வீக ஒளி வீச ஆரம்பிக்கிறது

இந்தக் கட்டத்தில் நாம் மூன்றாம் சிந்தனைக்கு வருகிறோம். காதல் நெஞ்சம் படைத்த ஒருவன் தன்னையும் தன் சூழலையும் மறந்து தன் காதலியின் குணத்தையும் ஆற்றலையும் ஆராய்வது போல், இறையன்பு கொண்டவர்கள் அனைத்தையும் மறந்து இறைவனைப் பற்றி ஆராய முற்படுகிறார்கள்.

இறைவனின் ஆற்றல்களை - அவனது தன்மைகளை ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வருவது அசாத்தியமானதொரு காரியம். முன்னர் நான் பல தடவைகள் குறிப்பிட்டது போல், இறையறிவைப் பொருத்த மட்டில் கரை கண்டவர் எவரும் கிடையாது. அனைவரும் அரை குறையாகத் தான் இறைவனைப் பற்றித் தெரிந்திருக்கிறார்கள். ஏனெனில் மனிதனின் அறிவு குறைவுள்ளது. இறைவனோ குறை

வற்றவன். எனவே குறைவுள்ள மனிதனால் குறைவற்ற இறைவனை முழுக்க முழுக்க அறிந்து கொள்ள முடியாது.

இதனால் தான், ''இறைவனைப் பற்றிச் சிந்திக்காதீர்கள். அவனுடைய படைப்புகளைப் பற்றிச் சிந்தியுங்கள்'' என்று பெருமானார் குறிப்பிட்டிருக்கிறார்கள். மனிதனின் சிந்தனையும் ஊடுருவிப் பார்த்து உண்மையை அறியும் திறனும் பலவீனமானவை; இறைவனை ஊடுருவிப் பார்த்துத் தெளியும் திறமை அவற்றிற்குக் கிடையாது என்பதே இதற்குக் காரணம்.

தெளிந்த மனம் படைத்த சிலர் - மிகச் சிலர் இறைவனைப் பற்றி ஓரளவு தெரிந்து வைத்திருக்கிறார்கள். எனினும் அவர்களாலும் குறிப்பிட்ட எல்லைக்கு அப்பால் சென்று எதையும் அளந்து பார்த்து விட முடியாது. சுத்தமான சிந்தனையும் ஊடுருவிப் பார்க்கும் கண்ணோட்டமும் பெற்ற அவர்களே சில வேளைகளில் சிந்தனை இழந்து தவிக்கிறார்கள். ஒரு நேரத்தில் ஏற்படும் கண்ணோட்டம் மறு நேரத்தில் ஏற்படுவதில்லை. சூரியனை நேருக்கு நேராக நின்று நீண்ட நேரம் பார்க்க முடியாதது போல் அவர்களால் நீண்ட நேரம் இறைவனின் பேராற்றல் குறித்துச் சிந்திக்க முடிவதில்லை.

இந்தப் பெருந்தகைகளின் நிலையே இப்படி யிருந்தால் பாமரர்களைப் பற்றி எழுதுவதற்கு என்ன இருக்கிறது?

அவர்களை வெளவாலுக்கு ஒப்பிடலாம். அதன் பார்வையில் ஒளி கிடையாது. ஒளி கொடுக்கும் பொருள்களை அதனால் ஊடுருவிப் பார்க்க முடியாது. இரவெல்லாம் அது சூரியனை எதிர்பார்த்துக் காத்துக் கிடக்கிறது.



சூரியன் உதயமானதும் அதன் ஒளியில் அந்த உயிர்ப்பிராணி தன் பார்வைக்குரிய சக்தியைப் பெறுகிறது. அப்புறம் அது தன்னைச் சுற்றியுள்ள அனைத்தையும் பார்க்கிறது. ஆனால் ஏறெடுத்துப் பார்க்கும் துணிவு அதற்குக் கிடையாது.

சூரியனை அரைக்கால் வினாடி நேரத்திற்கு ஏறிட்டுப் பார்க்கும் மனிதன் இருக்கிறான். ஆனால் அவன் அத்துடன் அந்த வேலையை நிறுத்திக் கொள்ள வேண்டும். இல்லையேல் அவன் பார்வை மழுங்கிப் போய் விடும்.

இறைவனை அறிகிறவர்களின் நிலையும் இத்தகையதுதான். மின்னல் வெட்டி மறையும் நேரத்திற்கு, கண்மூடி திறக்கும் நேரத்திற்கு அவர்களால் இறைவனின் பேரொளியை ஏற்க முடியும். ஆனால் அத்துடன் அவர்கள் நிறுத்திக் கொள்ள வேண்டும். இல்லையேல் குழப்பமும் தடுமாற்றமும் உருவாகும்; உள்ளத்தின் ஆற்றல் பிடிப்பின்றித் தடுமாறத் தொடுக்கும்.

இத்தகைய அதிர்ச்சியை எல்லோராலும் சகித்துக் கொள்ள முடியாது. பெரும்பாலோருக்கும் இது அசாத்தியமும் கூட. இந்த வழியில் பித்துப் பிடித்தவர்கள் இன்றைக்கும் தெருத் தெருவாக அலைந்து கொண்டிருக்கிறார்கள்.

இறைவனைப் பற்றிய அறிவைப் பாமரர்களுக்குப் போதிக்கும் எண்ணத்துடன் சிலர் இப்படி விளக்கம் கொடுத்தார்கள்: ''அவன் இடத்துக்கும் காலத்துக்கும் கட்டுப்படாதவன்; எல்லைகளுக்கும் திசைகளுக்கும் அப்பாற்பட்டவன்; உலகுடன் சேர்ந்தவனுமல்ல; உலகை விட்டுப் பிரிந்தவனுமல்ல...''

இந்த விளக்கம் பொதுமக்களுக்குப் புரிவதில்லை. நெற்றியை நெறித்து, புருவத்தை நெறித்து அவர்கள் சிந்தனை செய்கிறார்கள். ஆனால் அவர்களின் சிந்தனை எந்த உண்மையையும் தெரிந்து கொள்ளாமல் ஏமாற்றத்துடன் திரும்புகிறது. எனவே எடுத்த எடுப்பில் அனைத்தையும் மறுக்கிறார்கள்.

வேறு சிலர் இன்னும் மோசமான நிலையில் இருக்கிறார்கள் ''இறைவனுக்குத் தலை, கால், கை, கண், மூக்கு எதுவும் கிடையாது!'' என்று நாம் அவர்களிடம் கூறினால், முகத்தைச் சுளித்து மறுக்கிறார்கள். அவர்கள் தம்மை மட்டுமே உற்றுப் பார்த்திருக்கிறார்கள். தமக்குத் தலை, கண், மூக்கு, கை, கால் முதலிய அவயவங்கள் இருப்பதை உணர்ந்திருக்கிறார்கள். அவற்றைச் சிறப்பிற்குரியவை என்று கருதியிருக்கிறார்கள். அவை இறைவனுக்கும் இருக்க வேண்டும் என்று எண்ணியிருக்கிறார்கள். எனவே நம்மை வெறுப்புடன் ஏறிட்டுப் பார்க்கிறார்கள்.

''ஆம், நாங்கள் கூறுவது முற்றிலும் உண்மை. இறைவனுக்கு எந்த அவயவமும் கிடையாது. இதுவே இறைவனைப் பற்றிய வர்ணனை!'' என்று நாம் மீண்டும் கூறுகிறோம்.

''பேசாமலிருங்கள்; உளறாதீர்கள். ஆண்டவனைப் பற்றி அப்படியெல்லாம் சொல்வது பெரும் பாவம். நீங்கள் கூறியது ஆண்டவன் பற்றிய வர்ணனையல்ல. இந்தியப் பூசணிக்காய் பற்றிய வர்ணனையே அது. அதற்குதான் நீங்கள் கூறும் வர்ணனை பொருந்தும்!'' என்கிறார்கள்.

என்னைக் கேட்டால், இதில் அதிசயம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. உயிரும் உடலும் கொண்ட



ஒரு படைப்புத்தான் ஈ – அதற்குப் பகுத்தறிவு இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம்.

''இறைவன் தூயவன். அவனுக்கு இறகுகள் கிடையாது. அவன் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குப் பறந்து செல்வது கிடையாது...'' என்று நீங்கள் அதனிடம் கூறினால் அது என்ன சொல்லும் தெரியுமா?

அனேகமாக அது இப்படித்தான் பதில் சொல்லும்; ''யார் சொன்னது? இறைவனுக்கு இறகுகள் கிடையாது என்று எப்படிச் சொல்ல முடியும்? எனக்கே அவை இருக்கின்றனவே! என்னை விட அவன் தாழ்ந்தவனா என்ன?...

பெரும்பாலோரின் பகுத்தறிவு இந்த நிலையில் தான் இருக்கிறது என்பதை நாம் வருத்தத்துடன் ஒப்புக் கொள்ளத் தான் வேண்டும். இதனால் தான் இறைவன் ''என்னைப் பற்றி என் அடியார்களிடம் கூறாதீர்; என்னை மறுக்க ஆரம்பிப்பார்கள். அவர்கள் புரிந்து கொள்ளும் விதத்தில் கூறும்?'' என்று ஒரு திருத்தூதருக்குச் செய்தியனுப்பினான்

எனவே இப்போது நமக்குக் கிடைத்திருக்கும் தீர்மானம் இதுதான்: இறைவனின் ஆற்றல்களையும் தன்மைகளையும் ஆழ்ந்து ஆராய முற்படுவது ஆபத்தாக முடியக் கூடும்!

இதுபோன்ற ஆழ்ந்த சிந்தனைக்கு இஸ்லாம் மறுப்புத் தெரிவித்திருக்கிறது. இந்தச் சிந்தனை குழப்பத்துக்கு வழி வகுக்கிறது என்பதே இதற்குக் காரணம்.

என்றாலும், இறைவனின் படைப்புகள் குறித்து நம்முடைய சிந்தனையை எவ்வளவு ஆழமாக வேண்டுமானாலும் செலுத்தலாம். இதற்குத் தடையில்லை.

ஏனெனில் இந்தச் சிந்தனை தெளிவையும் தீர்மானத்தையும் கொடுக்கும். குழப்பத்தையும் தடுமாற்றத்தையும் தடுக்கும்.

இறைவனின் படைப்புகள் எங்கும் இருக்கின்றன. நீங்களும் நானும் அவன் படைப்புகளே. நான் கண்டதும் நீங்கள் கண்டதும் அவன் படைப்புகளே. கண்ணால் கண்டவை, காதால் கேட்டவை, ருசித்துப் பார்த்தவை, அனுபவித்து மகிழ்ந்தவை அனைத்தையும் இறைவனே படைத்திருக்கிறான்.

எனவே இந்தச் சிந்தனையில் நாம் இறங்கும் போது, நமக்கு ஓரளவு இறையறிவும் கிடைக்கிறது. புத்தகத்தி லிருந்து அதன் ஆசிரியரை நாம் தெரிந்து கொள்வது போல், கடலையும் கரையையும் பார்த்து - மலையையும் மரத் தையும் பார்த்து அவற்றை படைத்த இறைவனை நாம் ஓரளவு தெரிந்துகொள்ளலாம். இந்த அறிவு நமக்குப் போதும்.

இந்தக் கட்டத்தில் நான்காம் சிந்தனை உருவாகிறது, இறைவனின் செயல்களை - அவனது படைப்புகளை ஆதாரமாக வைத்து இந்தச் சிந்தனை உருவாக்கப்படுகிறது.

இதைப் பற்றி நான் விரிவாக எழுத விரும்புகிறேன்.

5

# இறைவனின் செயல்

இறைவன் ஒருவனைத் தவிர்த்து மற்ற உள்ளமைகள் அத்தனையும் அவனது செயல்களே. நமக்கு எதிரிலும் நமக்குப் பின்னாலும் கோடி கோடியான உள்ளமைகள் இறைந்து கிடக்கின்றன. நமக்குக் கீழே மண்ணுக்கடியிலும் நமக்கு மேலே நீல விண்திரையிலும் பலகோடி உள்ள மைகள் இருக்கின்றன.

அவை அனைத்தும் இறைவனால் படைக்கப்பட்டவை. எனவே அவை ஒவ்வொன்றும் பல்லாயிரம் மர்மங்களைத் தன்னுள் மறைத்து வைத்துக் கொண்டிருக்கின்றன. தெளிந்த மனம் படைத்தவர்கள் உற்றுப் பார்க்கும் போது இறை வனின் பேராற்றலை அவை எடுத்துரைக்கின்றன - செதுக்கியெடுத்த செப்புச்சிலை சிற்பியின் ஆற்றலை எடுத்துரைப்பதுபோல்.

அந்த மர்மங்களையெல்லாம் எழுத்தில் அடைப்பது அசாத்தியமான ஒன்று. கடல் நீர் முழுவதையும் சாயமாக்கி வைத்துக் கொண்டு எழுத முற்பட்டாலும் முழுமையாக

விளக்க முடியாது. அவற்றில் நூற்றில் ஒரு பகுதியை விளக்கி முடிப்பதற்கு முன் சாயச் சமுத்திரம் மாயமாக மறைந்து விடும்.

என்றாலும் இந்த அத்தியாயத்தில் அந்த மர்மங்களில் - அற்புதங்களில் ஒரு பகுதியைச் சுட்டிக் காட்ட விரும்பு கிறேன். அதை வைத்துக் கொண்டு மற்ற அனைத்தையும் உங்களால் ஆராய முடியும் என்று நம்புகிறேன்.

இறைவனின் படைப்பினத்தைப் பல்வேறு கூறுகளாகப் பிரிக்கலாம். சில படைப்புகளைப் பற்றி நம்மால் எந்தத் தீர்மானமும் செய்ய முடிவதில்லை. அவற்றிற்கு மூலம் என்ன, அவை எப்படிப் படைக்கப்பட்டிருக்கின்றன என்று யாருக்குமே தெரியாது. நம்முடைய அறிவுக்கும் திறமைக்கும் அப்பாற்பட்ட எத்தனையோ படைப்புகள் நம்மைச் சுற்றிலும் பரந்து கிடக்கின்றன. ''உங்களுக்குத் தெரியாததையெல்லாம் இறைவன் படைக்கிறான்!'' என்று திருக்குர் ஆன் கூறுகிறது. இத்தகைய படைப்புகளுக்காகச் சிந்தனையை வீணாக்க வேண்டிய அவசியமில்லை.

இன்னும் சில படைப்புகளுக்குரிய மூலத்தையும் அடிப்படையையும் நாம் தெரிந்து வைத்திருக்கிறோம். இவ்றறை நாம் தாராளமாக ஆராயலாம். இந்த ஆராய்ச்சி தெளிவைக் கொண்டு வரும்.

வேறு சில படைப்புகள் புலனுணர்வுக்குப் புரியா தவை. அவற்றைக் கண்ணால் பார்க்க முடியாது; கரத்தால் தொட்டறிய முடியாது. வானவர்கள், 'ஜின்' வர்க்கம் இதற்குச் சரியான உதாரணங்கள்.

இப்படி எத்தனையோ விதங்கள். அவற்றில் நம் சிந்தனைக்கும் தெளிவுக்கும் தகுந்ததைத் தேர்ந்தெடுத்துக்



கொண்டு நாம் சிந்தனை செய்ய வேண்டும். தெளிவு கிடைக்க முடியாத பிரச்சினையை எடுத்து வைத்துக் கொண்டு சிந்தனை செய்வது அறிவுடைமையல்ல.

தலைக்கு மேலே விண்ணகம் விரிந்து நிற்கிறது. அதில் நின்று சூரியன் ஒளியைக் கக்குகிறது. எண்ணற்ற விண் மீன்கள் இரவு முழுவதும் கண் சிமிட்டுகின்றன. கீழே உற்றுப் பார்த்தால், நம்மையும் நம்மைப் போன்ற பல லட்சம் உயிர்களையும் மண்ணகம் சுமந்து கொண்டி ருக்கிறது.

மண்ணகத்தில் வாழும் உயிரினங்களைப் போல் விண்ணகத்தில் வாழும் எண்ணற்ற விண்மீன்களும் இறைவனின் ஆற்றலுக்கு ஆதாரங்களாக நிற்கின்றன. அவற்றில் சில, வட்டக் கோட்டில் நீந்திச் செல்கின்றன. இன்னும் சில, எட்டாத உயரத்தில் நின்று துடிக்கின்றன.

இவை அனைத்திலும் உங்கள் சிந்தனைக்கு விருந்துண்டு. இந்தச் சிந்தனைக்குத் திருக்குர் ஆன் ஊக்கம் கொடுக்கிறது. ''விண்ணகம் மண்ணகத்தின் படைப்பிலும் இரவு பகல் மாறுபடுவதிலும் புத்திசாலிகளுக்குப் படிப் பினையுண்டு!'' என்பது திருமறையின் தீர்ப்பு.

இது உங்களுக்குச்சிரமமாகத் தெரிந்தால் விட்டு விடுங்கள். நீங்கள் விண்ணையோ விண்மீனையோ ஆராய வேண்டியதில்லை; சூரியனையோ, சந்திரனையோ துளைத்துப் பார்க்க வேண்டியதில்லை. உங்களையே நீங்கள் உற்றுப் பாருங்கள். வெளியில் உள்ள அற்புதங்கள் உங்களி டமும் இருக்கின்றன. ஏனெனில் விண் - மண்ணைப் படைத்தவனும் உங்களைப் படைத்தவனும் ஒரே இறைவன்தான்.

உங்களுக்கு மிகவும் அருகில் இருப்பது உங்கள் உயிர். ஒரு வினாடியும் அதனை விட்டு நீங்கள் பிரிந்திருப்பதில்லை. அந்த உயிரில் தான் எத்தனை அற்புதங்கள் மறைந்திருக்கின்றன! நூற்றில் ஒரு பகுதியையும் ஒரு மனிதனால் அறிந்து கொள்ள முடியுமா? அதற்கு நீங்கள் முயற்சி செய்ததுண்டா?

இல்லை, இல்லவே இல்லை. அவற்றை யெல்லாம் நீங்கள் பொருட்படுத்துவதில்லை. உங்களைப் பற்றியே தெரிந்து கொள்ளாத நீங்கள் மற்றவர்களைப் பற்றி-மற்றவற்றைப் பற்றி எப்படித் தெரிந்து கொள்ளப் போகிறீர்கள்?

''உங்களிடமே இறைவனின் ஆதாரம் இருக்கிறது. நீங்கள் உற்றுப் பார்க்கக் கூடாதா?'' என்று திருக்குர் ஆன் கேட்கிறது.

திருக்குர் ஆனின் குரல் அடியில் தொடர்ந்து ஒலிக்கிறது.

''உங்களை நாம் கேவலமான நீர்த் துளியிலிருந்து படைக்கவில்லையா''

''மனிதன், குதித்துப் பாயும் விந்தில் ஒரு துளியாக இருந்து, அப்புறம் ஒரு சதைத் துண்டாக உருவெடுக்க வில்லையா?''

திருக்குர் ஆனில் ''விந்து'' எனும் வார்த்தை திரும்பத் திரும்ப உபயோகிக்கப்பட்டிருக்கிறது. ஏனெனில் அது உங்கள் கவனத்தைப் பெறவேண்டும் என்று வல்லவன் கருதியிருக்க வேண்டும்.

விந்து என்றால் என்ன? அது அருவருப்பான நீர்த்துளி. சற்று நேரம் அதனை விட்டு வைத்தால் காற்றில் காய்ந்து



போகும். ஆணுக்கும் பெண்ணுக்கும் முறையே முதுகெலும்பிலிருந்தும் நெஞ்சுக் குழியிலிருந்தும் விந்து உருவாகிறது. இந்த வேலையில் ஈடுபடும் ஆணும் பெண்ணும் பாசத்தினால் எப்படிப் பிணைக்கப்படுகிறார்கள் என்று நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். அன்பும் காமமும் சேர்ந்து அந்த இருவரையும் எப்படிச் சேர்த்து வைத்திருக்கிறது என்று சிந்தித்துப் பாருங்கள்.

பெண்ணின் கர்பவீட்டில் ஆண் துளியும் பெண் துளியும் கலந்து குழந்தை உருவாகிறது. இந்தக் கட்டத்தில், மாதாமாதம் தொடர்ந்து வெளியேறிக் கொண்டிருந்த மாத விடாய் உதிரம் தடுத்து நிறுத்தப்படுகிறது. அது வளரும் குழந்தைக்கு உணவாகப் பயன்படுத்தப்படுகிறது. எனவே நீர்த்துளி சதைத் துண்டாக மாறி,அவயவங்கள் கொண்ட மனித உருவாகத் திரும்பி, அப்புறம் உயிரோட்டத்தைப் பெற்று வயிற்றுக்குள்ளேயே துடிக்க ஆரம்பிக்கிறது.

இலேசான மஞ்சள் கலந்த வெண்மையான நீர்த்துளியிலிருந்து இறைவன் எப்படிச் செக்கச் செவேல் என்ற மாமிசத் துண்டைப் படைத்தான்! காற்றினால் உலர்ந்து போகும் விந்திலிருந்து அவன் எப்படிக் கடினமான எலும்புகளையும் நரம்புகளையும் உருவாக்கினான்!

எல்லா எலும்புகளும் எல்லா நரம்புகளும் ஒரே விதமானவையல்ல. சில நரம்புகள் கம்பிகளைப் போன்றவை. வேறு சில நரம்புகள் குழாய்களை நிகர்த்தவை. இந்த நரம்புகளை நாம் 'ரத்த நாளங்கள்' என்று குறிப்பிடுகிறோம்.

எலும்புகளிலும் இந்த வேற்றுமை யுண்டு. அவற்றில் சில நீளமானவை ; இன்னும் சில வட்டமானவை; வேறு சில கட்டையானவை; மற்றும் சில முக்கோணத்தை

நிகர்த்தவை. இப்படிச் சிறியதும் பெரியதுமாக எத்தனையோ எலும்புகள்.

பார்ப்பதற்கு அழகாகவும் உருண்டையாகவும் இருக்கிறது. மனிதனின் தலை, அது உருவாவதற்கு எத்தனை எலும்புகள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன என்று நினைக்கிறீர்கள்? சிறியதும் பெரியதுமாக ஐம்பத்தைந்து எலும்புகள் ஒன்று சேர்ந்து இப்படி உருண்டையான தோற்றம் வந்திருக்கிறது.

முதுகெலும்பு என்று நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். அதை நீங்கள் கண்ணால் பார்த்திருக்கிறீர்களா? அது ஒரே ஓர் எலும்பல்ல; அழகான 24 எலும்புத் துண்டுகள் சேர்ந்தே முதுகெலும்பு எனும் பெயரைப் பெற்றிருக்கிறது. முக்கோண வடிவிலிருக்கும் அந்த எலும்புகள், ஒன்றுக்கு மேல் ஒன்று இடுப்பெலும்பிலிருந்து பிடரி எலும்புவரை செல்கின்றன.

இந்த எலும்புத் தொடருக்குள்ளே, கீழிருந்து மேல் வரை,துவாரம் ஒன்று செல்கிறது. அதில் ஒடக் கூடியது பிரதானமானதொரு ரத்த நாளம். இந்த ரத்த நாளத்திலிருந்தே விந்துக்குத் தேவையான ரத்தம் மேலேயிருந்து கீழ் நோக்கிப் பாய்ந்து வருகிறது.

விரல் எலும்புகள், முழங்கால் எலும்புகள், கழுத்து எலும்பு முதலிய அனைத்தையும் சிந்தனை செய்து பாருங்கள். அவை உங்களுக்கு இறைவனின் பேராற்றல் பற்றிய விளக்கத்தைக் கொடுக்கும்.

ஒரு மனிதனைப் படைப்பதற்கு நூற்றுக்கணக்கான எலும்புகளும் நரம்புகளும் எதற்கு என்று கேட்கிறீர்களா?



நியாயமான கேள்விதான். ஒரே எலும்பில் மனிதனைப் படைப்பது இறைவனின் ஆற்றலைப் பொறுத்த மட்டில் அப்படியொன்றும் சிரமமான காரியமல்ல. அவனால் அப்படிப் படைக்க முடியும். ஒரே கல்லில் சிற்பியொருவன் மனிதனின் உருவத்தைச் செதுக்குகிறான். இதே போன்று ஒரே எலும்பிலும் ஒரு மனிதனை இறைவனால் உருவாக்க முடியும்.

ஆனால் இதில் ஒரு தொல்லையுண்டு. அப்படி ஒரு மனிதன் படைக்கப்பட்டால் அவன் சிற்பி செதுக்கிய கற்சிலையைப் போல் ஒரே இடத்தில் இருக்க வேண்டியது தான். அவனால் அசையவோ நடக்கவோ முடியாது; உண்ணவோ உடுத்தவோ முடியாது; பேசவோ பிடிக்கவோ முடியாது. ஏனெனில் இவை அத்தனைக்கும் எலும்புகளின் இயக்கமே அடிப்படையாக இருக்கிறது.

எனவே கற்சிலைக்கும் உயிர் மனிதனுக்குமிடையில் வேற்றுமையைக் காட்டுவதற்காகவே மனிதனை இறைவன் எண்ணற்ற எலும்புகளால் உருவாக்கியிருக்கிறான். மனிதன் செயலாற்றப் பிறந்தவன். சிலையைப் போல் அவன் என்றைக்கும் மரத்துப் போய் நிற்கக் கூடாது.

மனிதனின் எலும்புகளை எண்ணிக் கொண்டு உட்கார்ந்திருப்பது நம்முடைய வேலையல்ல. வைத்தியர்களும் உடற் கூறு ஆய்வாளர்களும் அந்த வேலையைச் செய்யட்டும். நமக்கும் அதற்கும் அதிகமான சம்பந்தம் கிடையாது.

என்றாலும் மனிதனின் உள்ளுறுப்புக்கள், வெளியுறுப்புக்கள், எலும்புகள், நரம்புகள் தசைகள் அவை செய்யும் வேலைகள் முதலியவற்றை நீங்கள் ஆராயும் போது,

இறைவனின பேராற்றலில் ஒரு சிறு துண்டு உங்களுக்குத் தெரியக் கூடும்; படைக்கப்பட்டவற்றிலிருந்து படைத்த வனை அறியும் திறன் உங்களுக்கு இருக்கக் கூடும். எனவே தான் இந்த விளக்கத்தை நான் மேற்கொண்டிருக்கிறேன்.

மனிதனுக்கு வாய், கண், காது, கை, கால், விரல், முதலிய வெளியுறுப்புக்கள் இருப்பது போல் - குடல், ஈரல், பித்து, உணவுப்பை, இதயம் முதலிய உள்ளுறுப்புக்களும் இருக்கின்றன. இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு வேலைக்காகப் படைக்கப்பட்டிருக்கின்றன.

கால்கள் நடப்பதற்கும் ஓடுவதற்கும் பயன்பட்டால், கைகள் பிடிப்பதற்கும் கொடுப்பதற்கும் பயன்படுகின்றன. மல்லிகை மலரின் அழகைக் கண்கள் ரசிக்கும் அதே நேரத்தில், அதன் நறுமணத்தை தனக்கு உரிமையாக்கிக் கொள்கிறது மூக்கு.

உள்ளுறுப்புக்களின் வேலைகள் இன்னும் அற்புதமா னவை. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு வேலையைச் செய்கின்றன. இதயம் மனிதனின் உடல் முழுவதற்கும் ரத்த நாளங்களின் வாயிலாக உதிரத்தைச் செலுத்தினால், தேவை யற்ற திரவங்களை அப்புறப்படுத்தும் வேலையைப் பித்து செய்கிறது. மனிதனின் அவயவங்களை இயக்குவதற் கென்று உடல் முழுவதும் 529 தசைகள் அமைக்கப்பட்டி ருக்கின்றன. மாமிசம், தோல், நரம்பு, மெல்லிய ரத்த நாளங்கள் முதலியவற்றினால் அவை உருவாக்கப்பட்டி ருக்கின்றன. சிறியதும் பெரியதுமான அந்தத் தசைகள் உடல் முழுவதையும் இயக்குகின்றன. கண் விழியை இயக்குவதற்கு மட்டும் 24 தசைகள் செயல்படுகின்றன.



மனிதனின் உடல் ஒரு தொழிற்சாலை. அதில் நடக்கும் துரித வேலைகள் எவர் மனத்தையும் கவரும் ஆற்றல் படைத்தவை. அவற்றைப் பற்றிய முழு விளக்கத்திற்கு இந்தச் சிறிய நூல் இடம் தராது.

இப்படி எல்லா உறுப்புக்களையும் சீராகப் பெற்றுக் குழந்தை மண்ணுலகத்துக்கு வருகிறது. இங்கு நீங்கள் கொஞ்சம் சிந்தனை செய்ய வேண்டும். மாதக் கணக்கில் இருட்டறையில் கிடந்த குழந்தை மிகக் குறுகிய வாயில் வழியாக வெளியே வருகிறது. அதன் வருகைக்கு வரவேற்புக் கூறுவது போல் அந்தக் குறுகிய வழி விரிந்து இடம் கொடுக்கிறது. பிரசவ வேளையிலும் அந்தக் குறுகிய வழி குறுகிய வழியாக இருந்து விட்டால் நிலைமை எப்படியிருக்கும் என்று எண்ணிப்பாருங்கள். சிறிய வழியைப் பெரிய வழியாக்கிய பேரறிஞனை நினைத்துப் பாருங்கள். அவனுடைய அன்பும் பாசமும் இல்லையேல் இந்த மண்ணகத்தில் ஒரே ஒரு குழந்தை கூட உயிருடன் பிறந்திருக்க முடியாது.

அப்புறம், பிறந்த குழந்தை தாயின் அன்பிலும் அரவணைப்பிலும் வளர்கிறது. தன் குழந்தைக்காக அந்தத் தாய் எதையும் தியாகம் செய்யத் தயராயிருக்கிறாள். இத்துணை ஆழமான அன்பை அவளது உள்ளத்தில் திணித்தது யார் என்று நீங்கள் எப்போதாகிலும் எண்ணிப் பார்த்ததுண்டா?

தாயின்நெஞ்சம் இன்பத்தால் விரிகிறது. அவளது மார்பகங்களில் அமுதூற்றுப் பொங்குகிறது. பல்லில்லாத பச்சிளங் குழந்தைக்கு, உண்ணத் தெரியாத அந்த மானிடப் பிஞ்சுக்கு அதுதான் உணவு.

பசி வயிற்றைக் கிள்ளும் போது, யாரோ சொல்லிக் கொடுத்தது போல், அது அலறுகிறது. குறிப்புணர்ந்த தாய் சம்பந்தப்பட்ட உறுப்பை அதன் வாயில் வைத்ததும் அது உறிஞ்சிக் குடிக்கிறது. மிக நுண்ணிய துவாரம் வழியாக வரும் அமுது குழந்தையின் பசியை அடக்குகிறது.

இங்கு ஒரு விவரத்தை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். பசி ஏற்பட்டதும் குழந்தை அழுகிறது அல்லவா? தாயின் கவனத்தைக் கவர்வதற்குரிய சிறந்த வழி இது. ஆனால் நேற்றுப் பிறந்த அந்தக் கொழுந்துக்கு இதைக் கற்றுக் கொடுத்தது யார்?

தாயின் மார்பகத்தில் இருக்கும் துவாரம் மிக நுண்ணியது, உறிஞ்சினாலன்றி, அதிலிருந்து பால் வர முடியாது. இப்படியிருந்தும் அந்தப் புதுக்குழந்தை உறிஞ்சித்தான் குடிக்கிறது. ஆனால், அதற்கு உறிஞ்சிக் குடிக்கக் கற்றுக் கொடுத்தது யார் என்று நீங்கள் என்றாகிலும் சிந்தனை செய்திருக்கிறீர்களா?

அற்புதங்கள்! எல்லாம் அற்புதங்கள்! அவை ஒவ்வொன்றும் இறைவனின் பேராற்றலை நமக்குப் படம் பிடித்துக் காட்டுகின்றன; அவனது பேரன்பைச் சித்தரித்துக் காட்டுகின்றன.

இவை அனைத்தையும் இறைவன் விந்துத் துளியிலிருந்தே படைத்திருக்கிறான். இதற்கு அவனுடைய கருத்தே ஆதாரம் தருகிறது. விந்துத் துளியின் மூலக் கூறுகளை ஆராய்ந்து பார்த்தால்,அதில் நம்மால் கண்ணையோ காதையோ பார்க்க முடியாது; எலும்பையோ, நரம்பையோ காண முடியாது. அதில் கலந்திருப்பதெல்லாம் ஒரே விதமான மூலக் கூறுகள் தான்.



ஒரேவிதமான பொருளிலிருந்து இறைவன் ஆயிரக் கணக்கான பொருள்களை - ஒன்றுக்கொன்று வேறு பட்ட பொருள்களை எப்படிப் படைத்தான்? - இது உங்கள் சிந்தனைக்குரிய பிரச்சினை.

நான் ஆச்சரியப்படுகிறேன். மனிதனின் சிந்தனையைப் பார்க்கும் போது எனக்கு வியப்பு ஏற்படுகிறது. ஒரு சுவரில் தீட்டப்பட்டிருக்கும் சித்திரம் ஒன்றை அவன் பார்க்கிறான். அதன் வர்ணக் கலவை, பின்னணி அமைப்பு, சித்திரத் திறமை அனைத்தையும் அவன் ஆராய்கிறான். சித்திரத்தில் தெரியும் பாவத்தையும் உயிரோட்டத்தையும் அவன் எடை போடுகிறான்.

''ஆகா! எத்துணை அழகான சித்திரம்!'' என்று சித்திரத்தைப் பாராட்டுகிறான். ''ஒவ்வோர் அங்கத்திலும் உயிரோட்டம் தெரிகிறதே. சித்திரக்காரன் தன் திறமை முழுவதையும் இதில் கொட்டி வைத்திருக்கிறான்!'' என்று சித்திரம் தீட்டியவனைப் பாராட்டுகிறான். அந்தச் சித்திரக் காரன் பற்றிய உயர்வான எண்ணம் அவன் மனத்தில் வெகு நேரம் நிலைத்து நிற்கிறது.

ஆனால் அவன் மனிதன் எனும் சித்திரத்தை ரசிப்பதுமில்லை. அதனை உருவாக்கி உயிர் கொடுத்து நடமாட வைத்த தனிநாயனைப் பாராட்டுவதுமில்லை. அசலை மறந்து போலியைக் கட்டிக் கொண்டு மாரடிக்கிறானே மனிதன், அவனைப் பார்க்கும் போது நம்மால் எப்படி ஆச்சரியப்படாமலிருக்க முடியும்? நாம் ஆச்சரியப்படும் அதே வேளையில் அனுதாபமும் அடைகிறோம்.

மனிதனைப் பற்றியே நீங்கள் காலம் காலமாகச் சிந்தித்துக் கொண்டிருக்கலாம்; சிந்தனையில் கிடைத்த முடிவுகளைக் கற்றை கற்றையாக எழுதி வைத்துக் கொண்டே யிருக்கலாம். அவனுடைய எண்ணம், செயல் ஒவ்வொன்றிலும் பல கோடி மர்மங்கள் மறைந்திருக் கின்றன. இதனால் தான் இறைவன் சுய சிந்தனையை - மனிதன் தன்னைப் பற்றிச் சிந்திக்கும் சிந்தனையைப் பெரிதும் வலியுறுத்துகிறான்.

மனிதன் சிறப்புள்ளவன் மட்டுமல்ல, அற்புதமான வனும் கூட. மனிதனைப் பற்றிய மர்மங்களை முழுமை யாகத் தெரிந்து கொண்டவர் எவருமில்லை.

''தன்னை அறிந்தவன் தன் நாயனை அறிந்து கொண்டான்'' எனும் நபிக் கருத்து இங்கு நம் கவனத் திற்குரிய ஒன்றாகும்.

❁

# 6

# மண்ணகம் பற்றி...

மனிதனைப் பற்றிச் சிந்தனை செய்து பார்த்து விட்டீர்களா? அப்படியானால் இப்போது மண்ணகம் பற்றிச் சிந்தனை செய்யுங்கள். ஏனெனில் மண்ணகத்தில் தான் மனிதன் வாழ்கிறான். வளைந்து நெளிந்து ஓடும் ஆறுகள், நாட்டைப் பிரிக்கும் ஆழ் கடல்கள், மலைக்கடியிலுள்ள விலையுயர்ந்த கற்கள், கடலுக்கடியில் ஒளிந்திருக்கும் ஆணி முத்துக்கள் முதலிய அனைத்தும் உங்கள் சிந்தனைக்குரிய பொருள்களே. இவை அத்தனையிலும் இறையறிவு இருக்கிறது.

வறண்டு கிடக்கும் மாநிலம் மழைத் தண்ணீர் பட்டதும் விதம் விதமான புற்பூண்டுகளையும் வர்ணனைக்கு அப்பாற்பட்ட மலர்ச் செடிகளையும் வெளியில் கொண்டு வருகிறது. தன்னிகரற்ற இறைவன் மண்ணகத்தில் தெளித்து வைத்திருக்கும் அழகுக்கு யாரால் தான் விளக்கம் கொடுக்க முடியும்!

மண்ணகத்தில் அங்கங்கே உயர்ந்து நிற்கும் மலைகள் மண்ணுக்கு வலுவூட்டுகின்றன. மண்ணுக்கு மேல் ஆறுகள்

ஓடுவது போல், மண்ணுக்கடியிலும் ஆறுகள் ஓடுகின்றன. மண்ணுக்கு மேலே ஒருவித அழகு என்றால், மண்ணுக் குள்ளே மற்றொரு வித அழகு. கண்ணைக் கவரும் மரகதமும் கோமேதகமும் மண்ணுக்கடியிலிருந்து தானே நமக்குக் கிடைக்கின்றன?

உறுதி வாய்ந்த பாறைகளுக்கு மத்தியிலிருந்து, வரண்டு போன நிலப்பரப்புகளுக்கு மத்தியிலிருந்து இறைவன் சுத்தமான தண்ணீரை வெளியில் கொண்டு வருகிறான். தண்ணீரினால் மண்ணில் முளைக்கும் கனி மரங்களுக்கும் மலர்ச் செடிகளுக்கும் அளவுதான் ஏது? அவற்றின் வகைகளை நம்மால் எப்படி வரையறுத்துக் கூற முடியும்?

ஆயிரக் கணக்கில் கனிகள் இருப்பது போல் அவற்றின் ருசியிலும் பல்லாயிரக் கணக்கில் வேறுபாடுகள் இருக் கின்றன. அவற்றில் ஒன்று காயில் கசக்கும். மற்றொன்று பழுத்தால் புளிக்கும். வேறொன்று காயில் துவர்க்கும்; கனியானால் இனிக்கும். பிறிதொன்று காயில் புளிக்கும்; கனியானால் தேனைப் பழிக்கும்- இப்படி எத்தனையோ வகைகள்.

இதில் ஆச்சரியம் என்ன என்று கேட்கிறீர்களா? இந்தக் கனி வகைகள் அத்தனையும் ஒரே தண்ணீரின் துணையால் ஒரே மண்ணிலிருந்து நமக்குக் கிடைத்திருக்கின்றன. மாங்காயில் புளிப்பைத் திணிக்கும் தண்ணீர் தேங்காய்க்கு இனிப்பைச் சேர்க்கிறது. வேம்பில் கசப்பை வைத்த மண்ணகம் கரும்பில் தித்திப்பை வைத்திருக்கிறது!

இங்கு நீங்கள் வினா எழுப்பலாம். ''அதெப்படி முடியும்? ஒரே பொருளிலிருந்து பல பொருள்கள்



உருவாகின்றன என்பதை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்? ஒரு நெல்லுக்குள் ஒரே அரிசிதான் இருக்க முடியும்!

நூற்றுக் கணக்கான வித்துக்களிலிருந்து நூற்றுக்கணக் கான கனிகள் உருவாகின்றன. இதில் அதிசயம் என்ன இருக்கிறது?''

ஏன் அதிசயம் இல்லை என்று எனக்கு இன்னும் புரிய வில்லை. நமக்கு அறிமுகமில்லாத செய்திகள் அத்தனையும் அதிசயங்கள் தான். ஆனால் இறைவனின் பேராற்றலைப் பற்றி எண்ணிப் பார்க்கும் போது உலகில் எந்த அதிசயமும் கிடையாது.

நீங்கள் குறிப்பிட்டது போல், நூற்றுக் கணக்கில் – ஏன், ஆயிரக் கணக்கில் வித்துக்கள் இருக்கின்றன. ஆனால் அந்த வித்துக்கள் அத்தனையும் ஒரே இறைவனின் ஆற்றலி லிருந்து தானே உருவாகி வந்திருக்கின்றன; ஒரே மண்ணில் தானே முளை விடுகின்றன! இதை ஏன் இன்னும் நீங்கள் கவனிக்க வில்லை? பொட்டல் திடலாகக் கிடந்த எத்தனையோ இடங்கள் மழைத்தண்ணீருக்குப் பிறகு, அழகிய சோலைகளாக – கனி மரத்தோட்டங்களாக மாறியதை நீங்கள் பார்த்ததில்லையா?

உலகில் இருக்கும் கனிகளில் எத்தனை விதமான ருசிகள் இருக்கின்றன! எத்தனை விதமான குணங்கள் இருக்கின்றன!

அவற்றில் ஒன்று மனிதனின் பசிக்கு உணவாகப் பயன்பட்டால் மற்றொன்று அவனுடைய நோய்க்கு மருந்தாகப் பயன்படுகிறது.

மண்ணிலிருந்து கனிகள் மட்டும் தானா உற்பத்தியாகின்றன? மனிதனின் நோய்களுக்கும் மிருகங்களின் நோய்களுக்கும் மூலிகைகள் எல்லாம் உற்பத்தியாகவில்லையா? அவற்றை எல்லாம் சிந்தனை செய்து பாருங்கள். அந்த மூலிகைகள் இல்லையேல் எத்தனையோ பேர் கொடிய நோயினால் மாண்டு போயிருப்பார்கள்.

மலைகளுக்கு அடியில் மறைந்திருக்கும் மணிகளை உங்கள் சிந்தனையில் வைத்து நிறுத்திப் பாருங்கள். மண்ணுக்குக் கீழேதான் எத்தனை விதமான மணி வகைகள் இருக்கின்றன! தங்கம், வெள்ளி, செம்பு, ஈயம்,இரும்பு முதலிய அத்தனையும் மண்ணிலிருந்தும் மலைகளுக்கடியிலிருந்தும் தானே நமக்குக் கிடைக்கின்றன! இன்னும் எத்தனை விதமான உலோகங்கள் மறைந்திருக்கின்றன என்று யாருக்குத் தெரியும்?

உங்கள் சிந்தனையை எவ்வளவு ஆழமாகச் செலுத்துகிறீர்களோ அவ்வளவு அதிகமாக அறிவுகள் பொங்கி வரும். இறைவன் எந்தப் பொருளையும் வீணாகப் படைக்கவில்லை. ஒவ்வொரு படைப்பிலும் அவன் பல மர்மங்களை மறைத்து வைத்திருக்கிறான். சிந்தனை செய்யுங்கள். அந்த மர்மங்களில் சிறிதளவாவது உங்கள் உள்ளத்தில் நுழைந்து பதியக் கூடும்.

வைரக் கல்லைப் போல் உப்பு எனும் கல்லும் மண்ணிலிருந்து தான் நமக்குக் கிடைக்கிறது. வைரம் மோதிரத்தையும் கிரீடத்தையும் அலங்கரிக்கலாமே தவிர, அது வயிற்றுக்குப் பயன்படாது. இந்த வேலைக்கு உப்பு பயன்படுகிறது. உணவுக்கு அது ருசியைக் கொடுக்கிறது.



எந்த நாட்டிலும் உப்பின் தேவை தவிர்க்க முடியாத ஒன்று தான். இதனால் தானோ என்னவோ இறைவன் இந்தச் செல்வத்தைக் குறைவறக் கொடுத்திருக்கிறான். கடல் தண்ணீர் முழுவதும் உப்புத்தானே!

ஓர் ஊரில் உப்பே கிடைக்கவில்லை என்று வைத்துக் கொண்டு சிந்தனை செய்து பாருங்கள். சிந்தனையின் முடிவில், இறைவன் எதையும் வீணாகப் படைக்கவில்லை என்ற ஞானம் உங்களுக்கு ஏற்பட்டு விடும்.

''விண்ணையும் மண்ணையும் அவற்றிற்கிடையிலுள்ள அனைத்தையும் நாம் விளையாட்டுக்காகப் படைக்கவில்லை!'' என்று இறைவன் தீர்ப்பு வழங்குகிறான்.

❁

# 7

# உயிரினம் பற்றி...

**உ**யிரினத்தின் பிரிவுகளில் மனிதனும் உட்பட்டி ருக்கிறான். என்றாலும் அனைத்தையும் விட அவன் உயர்ந்தவன். மனிதனைப் பற்றி எப்படிச் சிந்திப்பது என்பதை முதலில் நான் எழுதிவிட்டேன் . அதை வைத்து அவனுடைய பிறப்பிலிருந்து இறப்பு வரை எல்லா நிலைகளையும் நீங்களே சிந்தனை செய்து கொள்ளலாம். எனவே இப்போது நாம் மற்ற உயிரினங்களை ஆராய்வோம்.

உயிரினங்கள் பல்வேறு வகைகளாகப் பிரிக்கப்பட் டிருக்கின்றன. அவற்றில் சில விண்ணில் நெளிகின்றன. வேறு சில நீரில் நீந்துகின்றன. மற்றும் சில நீரிலும் நிலத்திலுமாக வாழ்கின்றன.

நடக்கும் உயிரினத்துக்கு இறைவன் கால்களைக் கொடுத்திருக்கின்றான். இரண்டு கால்களால் நட்பபவை சில. நான்கு கால்களைப் பெற்றவை வேறு சில. மற்றும் சில பத்துக் கால்களை அடைந்திருக்கின்றன. விசித்திரமான சில பிராணிகளுக்கு நூறு கால்கள் கூட இருக்கின்றன. இவற்றை நாம் அரிதாகவேனும் பார்க்க முடியும்.



அந்த உயிரினங்கள் ஒவ்வொன்றிலிருந்தும் மனிதனுக்கு ஒவ்வொரு விதமான நன்மைகள் கிடைக்கின்றன. குணம், உருவம் முதலியவற்றில் அவை ஒன்றுக்கொன்று மாறு பட்டிருக்கின்றன.

விண்ணில் பறக்கும் பறவைகளையும் மண்ணில் வசிக்கும் விலங்குகளையும் வீட்டில் இருக்கும் பிராணி களையும் ஆராய்ந்து பாருங்கள். அவை தம்மைப் படைத்த இறைவன் பற்றிய தெளிவான அறிவை உங்களுக்குக் கொடுக்கும். சந்தேகத்திற்ககோ குழப்பத்திற்கோ இட மில்லாத இந்த அறிவு உங்கள் ஆத்மீக வளர்ச்சிக்கு வழி காட்டும். இவற்றையெல்லாம் நீங்கள்தான் ஆராய்ந்து பார்க்க வேண்டும். இவற்றையெல்லாம் எழுத்தில் அடைப்பது மிகச் சிரமமான ஒன்று. ஏனெனில் ஒரு மூட்டைப் பூச்சியைப் பற்றியோ, ஒரு சிற்றெறும்பைப் பற்றியோ, அல்லது ஒரு சிலந்திப் பூச்சியைப் பற்றியோ நாம் ஆராய்ந்து பார்க்கும் போது அதில் எழுத்துக்குக் கட்டுப்படாத பல அற்புதங்கள் இருப்பதைப் பார்க்கிறோம்.

அதன் உணவு, அது தன் துணையிடம் காட்டும் நட்பு, அது அமைத்துக் கொள்ளும் வீடு முதலிய அனைத்திலும் அற்புதங்கள் நிறைந்திருக்கின்றன. கட்டிட வல்லுனர் கூடத் தோற்றுப் போவார்கள். அத்துணை ஆழ்ந்த திறமையுடன் இந்த எட்டுக்கால் பூச்சி தன் வீட்டை அமைத்துக்கொள்கிறது.

அது எப்படித் தான் வீடு கட்டுகிறது? அதுஒரு சிறு காற்றிற்கு நிற்காத வீடு. வழ வழப்பான எச்சிலால் அது உருவாக்கப்படுகிறது. இருந்தும் அதில் இறைந்து கிடக்கும் கலைத்திறன் நம்மைத் திகைக்க வைக்கிறது.

ஏறத்தாழ இரண்டடி இடைவெளியுள்ள இரண்டு சுவர்களையோ, இரண்டு சுவர்கள் ஒன்று சேரும் மூலையையோ அது முதலில் தேர்ந்தெடுத்துக் கொள்கிறது. உமிழ் நீரை முறைப்படி வடிய விட்டுக் கொண்டே அந்த இரண்டு சுவர்களுக்கும் இடையில் நடைபோடுகிறது; சிலந்திக் கூடு உருவாகி விடுகிறது.

அதில் ஒருவிதப் பசையுண்டு. ஈயோ எறும்போ தெரியாத்தனமாக வந்து விட்டால் அப்புறம் வெளியேறவே முடியாது. சிலந்திப் பூச்சி ஒரு மூலையில் உட்கார்ந்து கொண்டு தன்னுடைய பசிக்கு ஏதேனும் இரை கிடைக்காதா என்று எதிர்பார்த்திருக்கிறது. சிறிய உயிரினம் ஏதும் சிலந்திக் கூட்டுக்குள் சிக்கிக் கொள்ளும் போது சிலந்திப் பூச்சி பாய்ந்து வந்து அதைப் பிடிக்கிறது; தன் பசிக்கு உணவாக்கிக் கொள்கிறது.

சில வேளைகளில் தன் கூட்டிலிருந்து அது ஒரு நூல் வழியாகக் கீழே தொங்கிக் கொண்டிருக்கும். ஏன் தெரியுமா? பறக்கும் ஈக்களைப் பிடிப்பதற்குச் சிலந்திப் பூச்சி கையாளும் வழி இது.

சின்னஞ்சிறியதான இப் பிராணிக்கு இதையெல்லாம் யார் கற்றுக் கொடுத்தது என்று சிந்தனை செய்யுங்கள்.

யானையையும் சிலந்தியையும் ஒப்பிட்டுப் பாருங்கள். பின்னதை விட முன்னது பல்லாயிரம் மடங்கு பெரியது. அதன் கண்கள் சிலந்தியின் கண்களை விடப் பன்மடங்கு பெரியவை. அதன் சக்தியைப் பற்றிச் சொல்ல வேண்டியதே யில்லை. இப்படியிருந்தும் சில வேளைகளில் யானைக்கும் அடி சறுக்குகிறது. தனக்கென்று ஒரு வீட்டை அமைத்துக் கொள்ளத் தெரியாமல் அது வனத்தில் சுற்றியலைகிறது. தன்



சக்திக்குட்பட்ட சிறிய மிருகங்களைக் கொல்கிறது. சிங்கமோ புலியோ எதிர்ப்படும் போது தன்னைத்தானே அர்ப்பணித்துக் கொண்டு மாண்டு போகிறது.

ஆனால் இந்த எட்டுக்கால் பூச்சிக்கு இவ்வளவு திறமை எங்கிருந்து – எப்படி வந்தது? வினாவுக்குத் தெளிவான விடை கொடுக்கும் திறன் சிந்தனைக்குத் தான் உண்டு. எனவே சிந்தனை செய்யுங்கள்.

உயிர்ப் பிராணிகள் எண்ணற்றவை. அவை ஒவ்வொன்றிலும் பன்னூறு மர்மங்கள் மறைத்து வைக்கப்பட்டிருக்கின்றன. சிந்தனையின் போது அந்த மர்மங்கள் எல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக வெளிப்படுகின்றன. இதனால்தான் சிந்தனைச் செல்வர்கள் நாளடைவில் சிறந்த அறிஞர்களாக மாறிவிடுகிறார்கள். எட்டுக்கால் பூச்சி திக்கெட்டும் இறைவனை அவனது ஆற்றல்களை எடுத்துரைப்பது போல, உயிரினங்கள் ஒவ்வொன்றும் வல்லவனின் பேராற்றலை நமக்கு எடுத்துரைக்கின்றன.

இந்தச் சிந்தனையில் கிடைக்கும் அறிவு, ஏற்கனவே நான் குறிப்பிட்டது போல், தெளிவானது; சந்தேகத்திற்கு இடமில்லாதது. இத்தகைய அறிவைப் பெற்றவர்கள் உண்மையிலேயே சிறந்தவர்கள். அவர்கள் பலவீனமான சிலந்திப் பூச்சியிலிருந்து அதனைப் படைத்த சர்வ வல்லோனை அறிகிறார்கள்.

இந்த ஆராய்ச்சி நிச்சயமாக விரிவானதுதான். உயிரினங்களிலுள்ள அற்புதங்கள் கரை காண முடியாதவை. எண்ணிப் பார்க்கும் எவரும் விந்தையுறத்தான் செய்வார்கள்.

ஆனால் மனிதனின் குணங்களில் வரவேற்கத் தகாத ஒன்றும் இருக்கிறது. ஏதேனும் அதிசயத்தைப் பார்க்கும்

போது அவன் வாயைப் பிளந்து, கண்களை விரித்து, ''ஆச்சரியம்! பேராச்சரியம்!'' என்கிறான். என்றாலும் தன்னைத் தானே அவன் உற்றுப் பார்த்துக் கொள்வதில்லை. தன்னை ஓர் அதிசயப் படைப்பாக அவன் கருதுவதில்லை.

உண்மை அப்படியில்லை. உயிரினங்கள் அனைத்திலும் மனிதனே மிக அற்புதமானவன். தன்னை உற்றுப் பார்த்துத் தன் மீது ஆழ்ந்த கவனம் செலுத்தாத எந்த மனிதனும் இந்தத் துறையில் முன்னேற முடியாது.

உங்களைச் சுற்றியிருக்கும் பலதரப்பட்ட உயிரினங்கள் உங்களுக்கு அதிசயத்தை மட்டும் கொடுக்கவில்லை, அவற்றிலிருந்து கிடைக்கும் பொருள்கள் எத்தனையோ விதத்தில் உபயோகத்தையும் கொடுக்கின்றன.

ஆடு - மாடுகளின் தோல்களிலிருந்துசெருப்புத் தயாரிக்கிறோம். செம்மறியாட்டின் ரோமம் போர்வையாக நெய்யப்படுகிறது. ஆட்டுப்பால், மாட்டுப் பால் பற்றிய உபயோகங்களை எழுதியும் காட்ட வேண்டுமா என்ன? சில மிருகங்களை நாம் பிரயாணத்திற்குப் பயன்படுத்தினால், வேறு சில உயிரினங்கள் வீட்டுக்குக் காவல் புரிகின்றன.

இவற்றை எல்லாம் எண்ணிப் பார்த்தால் உங்கள் இதயப் பரப்பில் ஏற்படும் விந்தை யுணர்வுகளுக்குக் கணக்கு இருக்காது. இறைவனைப் பற்றி ஒரு மனிதனால் என்றைக்குமே முழுமையாகத் தெரிந்து கொள்ள முடியாது என்பதை அப்போதுதான் நீங்கள் அனுபவ ரீதியாக உணர்வீர்கள். அந்தப் பேரறிஞனைப் பற்றி முழுமையாக அறிய முடியவில்லை என்பதை உணர்ந்து கொள்வதும் இறையறிவுதான்.

அவன் நம் அனைவரையும் நேரிய வழியில் நடத்திச் செல்வானாக!

# 8

# நீருக்கடியிலே நிலை பெற்றவை

**நி**லத்தில் வாழ்பவை பல கோடி என்றால் நீருக்குள் நிலைத்திருப்பவை பலநூறு கோடி எண்ணிக்கைக்கும் கற்பனைக்கும் அப்பாற்பட்ட அவை இறைவனின் பேராற்றலைப் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன.

ஆழ்கடலும் அதிலுள்ள அளவற்ற அதிசயங்களும் இறைவனின் ஆற்றலுக்கு அறிகுறிகளே.

மண்ணகத்தைச் சுற்றிலும் கடல் சூழ்ந்து நிற்கிறது. நிலப்பரப்பை விட நீர்ப்பரப்பு பல மடங்கு பெரியது. அகன்று விரிந்த சமுத்திரத்தில் சிறிய தொரு தீவு எப்படியிருக்குமோ அப்படித்தான் நாலாபுறமும் சூழ்ந்த நீர்ப்பரப்புக்கு நடுவே நாம் வசிக்கும் நிலம் இருக்கிறது. இதைப்பெருமானார், ''ஓர் இசைக் கருவியை விட இந்தப் பூமி எப்படிப் பெரியதோ அப்படியே இந்தப் பூமியை விடக் கடல் பெரியது!'' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

நிலம் எனும் பெயரில் தெரிவதெல்லாம் ஒரு சிறு பகுதியே. மற்றப் பெரும் பகுதி நீருக்கடியில் ஒளிந்து கொண்டிருக்கிறது.

நிலத்தையும் அதிலுள்ள அதிசயங்களையும் நீங்கள் ஓரளவு ஆராய்ந்து விட்டீர்கள். இப்போது கடலையும் அதிலுள்ள அதிசயங்களையும் ஆராய்ந்து பாருங்கள். நிலப்பரப்பை விட நீர்ப்பரப்பு பெரியதல்லவா? எனவே நிலத்தின் அற்புதங்களை விட நீரின் அற்புதங்கள் அதிக மாகத்தானே இருக்க வேண்டும்?

கடலில் வாழும் உயிரினங்களில் சில கற்பனையால் காண முடியாத அளவுக்குப் பெரியவையாக இருக்கின்றன. அப்படி ஒன்று கடலில் மிதந்து கொண்டிருப்பதைக் கண்டால், அதை நீங்கள் ஒரு தீவு என்று எண்ணுவீர்கள். அது ஓர் உயிர்ப்பிராணி என்பதை எளிதில் கண்டுபிடிக்க முடியாது.

கப்பலில் இருக்கும் பிரயாணிகளில் சிலர் களைப் பாறும் எண்ணத்துடன் அதில் இறங்குவார்கள். ஆனால் அடுப்பு எரித்தால் அல்லது நெருப்புப் போட்டுக் கொளுத் தினால் அந்த உயிரினம் உஷ்ணத்தால் அசைய ஆரம்பிக்கும். அப்போதுதான் பிரயாணிகள் உணர்வார்கள்.

இது கற்பனைக் கதையல்ல; முழுக்க முழுக்க உண்மையான ஒன்று. கடலைக் கடந்து பிரணாயம் செய்கிற வர்கள் சில வேளைகளில் நம்ப முடியாத படைப்புகளை எல்லாம் கண்கூடாகப் பார்க்கிறார்கள். கரையில் இருக்கும் உயிரினங்கள் எல்லாம் கடலிலும் இருக்கின்றன. ஆனால் இங்கு இல்லாத பல படைப்புகள் அங்கு இருக்கின்றன.



ஆழ்கடலைக் கடந்து சென்ற எழுத்தாளர்கள் தாம் கண்ட அற்புதங்களை எல்லாம் புத்தகம் புத்தகமாக எழுதி வைத்திருக்கிறார்கள்.

கடலிலிருந்து நமக்குக் கிடைக்கும் செல்வங்களில் முத்து முதன்மையானது. நீருக்கடியில் சிப்பிக்குள் அது மறைத்து வைக்கப்பட்டிருக்கிறது. முத்துக் குளிப்பவர்கள் சிரமப்பட்டு அதை வெளியில் கொண்டு வருகிறார்கள். அம்பர் எனப்படும் வாசனைப் பொருள் கூடக் கடலில் தான் உருவாகிறது. தவிர, கடலிலிருந்து எத்தனையோ விதமான மணி வகைகள் நமக்குக் கிடைக்கின்றன.

கடலைக் கடப்பதற்கு அந்தக் காலத்தில் பாய் மரக் கப்பலையே நம்பியிருந்தார்கள். அப்போதைய மாலுமிகள் காற்றைப் பற்றியும் கடலைப் பற்றியும் நன்கு தெரிந்து வைத்திருந்தார்கள்.

கப்பலுக்குச் சாதகமான காற்று எப்போது வீசும், இளங்காற்று எப்போது பெரும் புயலாக மாறும், வீசும் காற்று எப்போது திசை திரும்பும் என்பன போன்ற எல்லா விவரங்களும் அவர்களுக்குத் தெரியும். காற்றின் பேச்சையும் அதன் பொருளையும் புரிந்து கொள்ளும் திறமை அவர்களுக்கு உண்டு.

நீரை நீங்கள் எப்போதாகிலும் ஆராய்ந்து பார்த்திருக் கிறீர்களா? ஒரு துளியை மேசை மீது வைத்துக் கொண்டு அதை உற்றுப் பாருங்கள். அது மிருதுவான ஒரு திரவம். துண்டாடுவதும் காயவைப்பதும் மிக எளிய காரியங்கள். ஆனால் அது எத்தனை உயிர்களுக்கு உபயோகப்படுகிறது! நீரில்லாத ஓர் ஊரையும் காற்றில்லாத ஒரு தேசத்தையும்

உங்களால் கற்பனை செய்தும் பார்க்க முடியுமா? உலகத்தின் செல்வங்கள் எல்லாம் உங்கள் கையிலிருந்தாலும், கொடிய தாகத்தின் போது அந்தச் செல்வங்கள் ஒரு வாய்த் தண்ணீருக்கு நிகராக முடியுமா?

தங்கத்தையும் வெள்ளியையும் மனிதன் மதிக்கிறான்; வைரத்தையும் பவளத்தையும் உயர்த்திக் கணிக்கிறான். ஆனால் வற்றாத செல்வமாகக் கிடைத்திருக்கும் நீரை அவன் மதிப்பதுமில்லை; அது குறித்துச் சிந்திப்பதுமில்லை.

இதையெல்லாம் நான் ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், படைப்பினங்கள் அனைத்திலும் உங்களுக்கு படிப்பினை யுண்டு என்பதைக் காண்பிப்பதற்குத்தான்!

ஆழ்ந்த சிந்தனையும் தெளிவான கண்ணோட்டமும் உங்களுக்கு இருந்தால் உங்களால் படைப்பினங்களின் பேச்சைச் சுத்தமாகக் கேட்க முடியும்; அதன் பொருளைத் துல்லியமாக உணர முடியும்!

''என்னை நீ பார்க்கவில்லையா? என்னுடைய தோற்றத்தையும் என்னால் கிடைக்கும் பலன்களையும் நீ எண்ணிப் பார்த்ததில்லையா?' என்று ஒவ்வொரு பொருளும் உங்களைப் பார்த்துக் கேட்கிறது.

''என்னைப் பார்! என்னை ஆராய்ந்து பார்! என்னைப் படைத்தது யார் என்று உனக்குத் தெரியுமா? என்னை நானாகவே படைத்துக் கொண்டேன் என்று எண்ணுகிறாயா? அல்லது, என் இனத்தைச் சேர்ந்த ஒரு பொருள் என்னைப் படைத்தது என்று நினைக்கிறாயா? அப்படியும் இல்லா விடில் என் இனத்துக்கு அப்பாற்பட்ட ஒன்று – இறைவனின் படைப்புகளில் ஒன்று என்னை உருவாக்கிற்று என்று கற்பனை செய்கிறாயா?''



நீர்த்துளி உங்களைப் பார்த்துத் தான் கேட்கிறது. நீங்கள் என்ன பதில் சொல்கிறீர்கள்?''

வேண்டாம்; நீங்கள் பதில் சொல்ல வேண்டாம். இதோ நீர்த்துளியே பதில் சொல்கிறது. அதை உற்றுக் கேளுங்கள், அது போதும்.

''இல்லை- இல்லவேயில்லை. இறைவன் ஒருவனைத் தவிர்த்து வேறு யாருக்கும் நான் அடிமையல்ல. அவன் தான் என்னைப் படைத்தான்; குறுமதியுள்ளவர்களுக்குப் புரியாத அறிவுகளை எல்லாம் என்னுள் திணித்து வைத்தான். அவற்றைப் புறக் கண்களால் பார்க்க முடியாது. மனக்கண் திறந்தவர்களால் மட்டுமே அவற்றைப் பார்க்க முடியும்!''

நீர்த்துளி என்று நாம் குறிப்பிடும் போது விந்துத் துளியும் அதில் கட்டுப்பட்டதுதான். அது என்ன சொல்கிறது தெரியுமா? நீங்களே கேட்டுப் பாருங்கள். அடியில் விந்துத் துளி தன் வரலாற்றைக் கூறுகிறது.

''நான் கேவலமானது என்று கருதப்படும் நீர்த்துளி. அருவருப்பான உதிரக் குழம்புக்கு மத்தியிலிருந்து என் வரலாறு ஆரம்பமாகிறது. எனக்கு உருவமும் அமைப்பும் ஏற்படும் வரை நான் இருட்டறையிலேயே புரண்டு கொண்டிருந்தேன். சக்தி மிக்க சித்திரக்காரன் ஒருவன் எனக்கு உருவம் கொடுத்தான்; கண்களையும் புருவங்களையும் அமைத்தான்; உதடுகளையும் கன்னங்களையும் வடித்தான்!''

கவனத்தைச்சிதற விடாதீர்கள். மனக் கண் பெற்றவர் களிடம் தான் அதுபேசுகிறது. எனவே உற்றுக் கேளுங்கள்.

''இறுதியில் நான் குழந்தையாக மண்ணகத்துக்கு வருகிறேன். இருட்டறையில் எனக்கு உருவம் கொடுத்தது

நிச்சயமாக ஒரு சித்திரக்காரன் தான். ஆனால் அவன் எங்கு இருக்கிறான்? என்னுள் இருக்கிறானா? எனக்கு வெளியில் இருக்கிறானா? ஆம், அவன் எங்கும் இருக்கிறான். நான் இருட்டறையில் படிப்படியாக உருவம் பெற்ற வரலாறு என் அன்னைக்கும் தெரியாது; என் தந்தைக்கும் தெரியாது. இன்னும் சொல்லப் போனால், முழு உண்மை எனக்கே தெரியாது!''

இந்த அற்புதச் சித்திரக்காரன் குறித்துச் சிந்தனை செய்யுங்கள். இவற்றை எல்லாம் பார்க்கும் போது உங்களுக்கு ஆச்சரியம் ஏற்படவில்லையா? அப்படியானால் நீங்கள் ஒரு விசித்திரப் பிறவி. நீங்கள் ஆச்சரியப்படாமல் இருப்பதே பெரிய ஆச்சரியம்!

இறைவனின் ஆற்றலுக்கு நம்மால் எப்படி விளக்கம் கொடுக்கமுடியும். தன் அன்பர்களுக்குப் புறக்கண்களையும் மனக்கண்ணையும் கொடுத்த அவன், விரோதிகளுக்குப் புறக் கண்களை மட்டும் கொடுத்தான். அவன் அன்பாளன்; அதே நேரத்தில் அடக்குமுறையாளன். அவன் மன்னிப்பவன் ; அதே வேளையில் தண்டிப்பவன். அவன் கட்டளையை யாரால் மீற முடியும்! அவன் தீர்மானத்தை எவரால் திருத்த முடியும்.

# 9

# காற்றும் மேகமும்

இறைவனின் ஆற்றலுக்கு எடுத்துக்காட்டாக நின்று உங்களைச் சிந்திக்கத் தூண்டுபவற்றில் காற்றும் ஒன்று. அது உருண்டையான மண்ணகத்து:க்கும் எல்லையற்ற விண்ணகத்துக்கு மிடையில் மண்ணைச் சுற்றி வளைத்துக் கொண்டு தேங்கி நிற்கிறது. காற்று வீசும் போது நாம் உணர்கிறோமே தவிர, நம்மால் அதைக் கண்களால் பார்த் தறிய முடியாது. இது நீரைவிட மோசமானது. நீரைத்தான் நாம் கண்களால் பார்த்தறிகிறோமே! கடற்பரப்பைப் போலவே இந்த வாயுப் பரப்பும் மண்ணகத்தைச் சூழ்ந்து கொண்டிருக்கிறது.

இந்த மண்டலத்தில் தான் பறவையினம் இறக்கைகளை விரித்து ஆனந்தமாகப் பறக்கிறது.

சில வேளைகளில் இறைவன் காற்றின் வேகத்தில் முன்னேற்றத்தை ஏற்படுத்துகிறான். அப்போதெல்லாம் புயல் உருவெடுக்கிறது. தீயவர்கள் அதனால் தண்டிக்கப் படுகிறார்கள்.

காற்று தொடர்ந்து வீசும் போது அதன் சக்தி நீரைக் கூட வற்ற வைத்து விடுகிறது.

வாயுப்பரப்பு ஒரு பகுதியில் நிலப் பரப்பையும், மற்றொரு பகுதியில் நீர்ப்பரப்பையும் தொட்டுக் கொண்டிருக்கிறது. நீருக்குள் காற்றுக்கு இடம் கொடுக்கவில்லை இறைவன். எனவே காற்று நிரம்பிய எந்தப் பொருளும் நீரில் மூழ்குவதில்லை. இந்த உண்மையின் அடிப்படையில்தான் மனிதன் கப்பலைக் கடலில் மிதக்க வைத்தான். இரும்பு, மரம் முதலிய பொருள்களாலான மரக்கலம் கடற்பரப்பில் மிதந்து செல்கிறது.

அப்புறம் விண்ணகத்தை அண்ணாந்து பாருங்கள். நீல விண்திரையில் பஞ்சுப் பொதிகளைப் போன்ற வெண் மேகக் கூட்டம் மிதந்து செல்வது தெரிகிறது. விண்திரையின் மறுகோடியில் கன்னங்கரேல் என்ற நீர்மேகம் ஊர்ந்து வருகிறது. அதனுள் இடி, மின்னல் முதலிய அற்புதங்கள் மறைந்திருக்கின்றன.

அவற்றையெல்லாம் திருக்குர்ஆன் அங்கங்கே சுட்டிக் காட்டியிருக்கிறது. ''விண்ணுக்கும் மண்ணுக்கு மிடையில் கட்டுப்படுத்தப்பட்ட மேகம்'' என்று அது குறிப்பிடுகிறது.

மழையைக் கண்ணால் பார்க்கும் நீங்கள் - இடியோசையைக் காதால் கேட்கும் நீங்கள் இந்த உண்மைகளை எல்லாம் ஓரளவேனும் உணர்ந்து கொள்ளத்தான் வேண்டும். இல்லையேல் உங்கள் கண்களையும் காதுகளையும் நீங்கள் முறைப்படி பயன்படுத்தவில்லை என்பதே பொருள்.

புறக் கண்களை வைத்துக் கொண்டு நீங்கள் இவற்றை எல்லாம் பார்க்கிறீர்கள். கொஞ்சம் கண்களை மூடிக் கொள்ளுங்கள். மனக் கண்ணுக்கு வேலை கொடுங்கள். மறைத்து வைக்கப்பட்டிருக்கும் மர்மங்கள் - அற்புதங்கள் எல்லாம் தெளிவாகத் தெரியும்.



களங்கமற்ற விண்திரையில் கரியமேகங்கள் மிதந்து செல்கின்றன. காற்றுப் போன்ற அரூபத் தன்மை பெற்ற அவை கனமான தண்ணீரைச் சுமந்து செல்கின்றன. நேரமும் இடமும் வரும் வரை அந்த நீர்ச்சுமையை அவை கொட்டி விடுவதில்லை. இறைவனின் கட்டளைப்படி, வரண்ட பகுதிக்குச் சென்று மழையாகப் பொழிகின்றன. விண்ணிலிருந்து கீழே இறங்கும் கோடிக்கணக்கான நீர்த்துளிகள் மண்ணுக்கு உயிர் கொடுக்கின்றன. முந்திய துளி பிந்தாமலும் பிந்திய துளி முந்தாமலும் அவை ஒரே சீராக இறங்குகின்றன.

உலக மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு முயன்றாலும் அவர்களால், பொழியும் மழையில் எத்தனை துளிகள் இருக்கின்றன என்பதைக் கண்டு பிடிக்க முடியுமா?

உண்மையைத் தெரிந்து கொள்ளாத சிலர் இப்படிக் கேட்கிறார்கள்: ''கனமான பொருள் மண்ணை நோக்கி இறங்குவது இயற்கை. மழைத்தண்ணீர் கனமானது. எனவே அது மழையாக மண்ணுக்கு வருகிறது. இதில் அதிசயம் என்ன இருக்கிறது? சிந்திப்பதற்கு என்ன இருக்கிறது?''

தண்ணீர் என்பது கனமான ஒரு பொருள்தான். இதை யாரும் மறுப்பதில்லை. கனமான பொருள் மண்ணை நோக்கி இறங்குவது இயற்கை என்பதையோ, கனமுள்ள பொருளைப் பூமியின் மத்தியப் புள்ளி தன் பால் இழுக்கிறது என்பதையோ யாரும் விளக்கிக் காட்ட வேண்டியதில்லை. அது ஒவ்வொருவரும் தெரிந்து வைத்திருக்கும் விவரம்.

என்றாலும் அந்தக் கனமான பொருளை இறைவன் எப்படி உயர்த்திச் சென்று வெண் மேகத்துக்குள் திணித்தான் என்பதை நீங்கள் சிந்தனை செய்து பாருங்களேன்! மேலிருக்கும் நீர் கீழ் நோக்கி இறங்குவதை நீங்கள் இயற்கை என்று குறிப்பிடுகிறீர்கள். ஆனால் அது எப்படி மேலே சென்றது? கீழிருந்து தண்ணீரை மேலே எடுத்துச் சென்றது யார்?

மரங்களுக்கும் செடி - கொடிகளுக்கும் மிக அத்தியாவசியமானது நீர். மண்ணில் கலந்து நிற்கும் தண்ணீர் வேர்களின் வழியாக மேலேறிச் சென்று மரத்தின் கிளைகள், இலைகள், காய்கள், கனிகள் அத்தனைக்கும் செலவில்லையா? கீழ் நோக்கி வர வேண்டிய தண்ணீர் இந்தக் கட்டத்தில் எப்படி மரத்தின் உச்சிக்கு ஏறுகிறது என்பதை உங்களால் விளக்க முடியுமா?

எங்கும் -எதிலும் அறிவுண்டு. அதே வேளையில் எங்கும் - எதிலும் அறியாமையுண்டு . அறியாதவர்களின் கடைசி எல்லையிலிருந்துதான் அறிஞர்களின் அறிவுப் பயணம் தொடங்குகிறது. எனவே இன்றைக்கு மறுப்புத் தெரிவிக்கும் நீங்கள் நாளைக்கு ஒப்புதல் தரக் கூடும்.

இறைவன் எல்லோருக்கும் நல்லறிவைக் கொடுத்தருள்வானாக!

## 10

# இறுதியாக இரண்டு வார்த்தைகள்

சிந்தனை என்பது மனிதனின் சிறப்புக் குணம். ஆனால் எதைச் சிந்திக்க வேண்டும், எப்படிச் சிந்திக்க வேண்டும் என்னும் பிரச்சினைகள் பெரும்பாலோருக்குப் புரியாதவை. எனவே அவர்களின் தேவைகளுக்கு நான் ஆரம்பத்திலிருந்தே முடிவுகள் எழுதி வந்திருக்கிறேன்.

சிந்தனை என்பது எப்போதும் சிறப்பிற்குரியது தான். எதைப் பற்றி வேண்டுமானாலும் சிந்தனை செய்யுங்கள். அதிலிருந்து சிறிதளவாவது இறையறிவு நிச்சயம் கிடைக்கும். படைப்பினத்தை வைத்துப் படைத்தவனை அறியும் திறன் உங்களிடம் இருக்க வேண்டும். இல்லையேல் எப்படியாவது அந்தத் திறனை அடைந்து விடுங்கள்.

அகிலத்தையெல்லாம் நீங்கள் சிந்தனையால் நிறுத்துப் பார்க்கும் போது எத்தனையோ விதமான அறிவுகள் உங்களுக்குக் கிடைக்கக் கூடும். இறைவன் விரும்பினால் இரண்டாம் 'கலீபா' உமர் (ரலி) அவர்களுக்கு கிடைத்த படித்தரம் உங்களுக்கும் கிடைக்கலாம். ''என் உள்ளம் என்

இறைவனைப் பார்த்தது!'' என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இந்தப் படித்தரத்தை அடைவதற்கு முயற்சி செய்யுங்கள்.

மேற் குறிப்பிட்டவை அனைத்தும் படைப்புகளைப் பற்றியவையே. என்றாலும் படைப்பிலிருந்து படைக்கிறவனைப் பற்றிய அறிவு ஏற்படுகிறது என்ற தத்தவத்தை அடிப்படையாக வைத்தே இந்த நூல் எழுதப் பட்டிருக்கிறது. படைப்பினம் பற்றிய அறிவு விரிய விரிய இறைவனைப் பற்றிய அறிவும் உங்களுக்கு முன்னால் விரியக் கூடும். அப்போது எழுத்துக்கும் வர்ணனைக்கும் அப்பாற்பட்ட பல மர்மங்கள் உங்கள் உள்ளத்தில் இடம் பிடிக்கும்.

இவ்வளவுதான் ஒரு மனிதனால் செய்ய முடியும். இதை விட்டு விட்டு நேரே சென்று இறைவனை முழுமையாகத் தெரிந்து கொண்டு வந்து விட முடியாது. இந்த முயற்சியில் ஆழ்ந்து ஈடுபட்டவர்கள் சிந்தனையிழந்து குழம்பித் தவிக்கிறார்கள்.

நீங்கள் குழப்ப வேண்டாம். உண்மையை அறிய வேண்டும். எனவே இறைவனைப் பற்றிச் சிந்திக்காதீர்கள். அவனை அறியும் வழியில் அவனது படைப்பினங்களைப் பற்றிச் சிந்தியுங்கள்.

இறைவன் அனைவருக்கும் தூய சிந்தனையையும் தெளிவான மனநிலையையும் கொடுத்தருள்வானாக! அவன் அன்பாளன்; குற்றங்களை மன்னிக்கும் மாமன்னன்!